بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 44

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

28 ரபீவுல் அவ்வல் 1443 ஹிஜ்ரி கமரி 04 நுபுவ்வத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 04 நவம்பர் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ
وَاحْذَرُوْا ۚ فَاِنْ تَوَلَّيْتُمْ فَاعْلَمُوْٓا اَنَّمَا عَلٰى
رَسُوْلِنَا الْبَلٰغُ الْمُبِيْنُ

நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள். மேலும் இந்தத் தூதருக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள். விழிப்பாக இருங்கள். நீங்கள் புறக்கணித்து விட்டால், தூதைத் தெளிவாக எடுத்துரைப்பதே நம் தூதரின் கடமை என்பதனைத் தெரிந்து கொள்ளங்கள். (5:93)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனித பலவீனத்திற்கு அளவே இல்லை. இறைவனுடைய அருளும், உதவியுமின்றி மனிதன் ஓர் அடி கூட நடக்க முடியாது. அவன் இந்த அளவிற்கு பலவீனங்களின் இலக்காகவும், தொகுப்பாகவும் இருக்கும்போது இறைவனுடன் அவனது விவகாரத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதே அவனது பாதுகாப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும் உரிய வழியாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### அல்லாஹ்விடத்தில் அர்ப்பணமாகும் அந்தஸ்து

இறைவனின் அருளும், உதவியுமின்றி மனிதன் எதையும் செய்ய முடியாது. இறைவன் பக்கம் மனிதன் ஈர்க்கப்படும்போதும், இறைவனிடத்தில் அர்ப்பணமாகிவிடும்போதும் அவனிடமிருந்து இறைப் பணி என்று கூறப்படும் வேலை நடைபெறுகின்றது. அவர் மீது உயர்விலும் உயர்வான ஒளிகள் வெளிப்படத் தொடங்குகின்றன. மனித பலவீனத்திற்கு அளவே இல்லை. இறைவனுடைய அருளும், உதவியுமின்றி மனிதன் ஓர் அடி கூட நடக்க முடியாது. நான் எந்த அளவுக்கு நம்பிக்கை வைக்கின்றேன் என்றால் இறைவன் புறமிருந்து அவனுக்கு உதவி கிடைக்கவில்லையென்றால் அவன் மலம் கழித்த பிறகு அவனால் பைஜாமாவின் (கீழாடை) நாடாவை கட்டுவதற்கு கூட ஆற்றல் பெற்றிருக்க முடியாது. மனிதன் (ஒரு) தும்மலில் மரணித்து விடுகின்றான் என்று மருத்துவர்கள் ஒரு நோயைப் பற்றி எழுதியுள்ளார்கள். நிச்சயமாக நினைவிற் கொள்ளுங்கள். மனிதன் பலவீனங்களின் தொகுப்பு ஆவான். எனவே தான் அல்லாஹ் خُلِقَ الْاِنْسَانُ ضَعِيْفًا என்று கூறுகின்றான். அவனுக்கென்று எதுவுமே இல்லை. தலை முதல் கால் வரை எந்த அளவிற்கு உறுப்புகள் உள்ளனவோ அதை விட அதிகமாக அவனுக்கு நோய்கள் ஏற்படுகின்றன. அவன் இந்த அளவிற்கு பலவீனங்களின் இலக்காகவும், தொகுப்பாகவும் இருக்கும்போது இறைவனுடன் அவனது விவகாரத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதே அவனது பாதுகாப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும் உரிய வழியாகும்.

மனிதன் இறைவனின் உண்மையான, தூய்மையான அடியாராக ஆக வேண்டும். அவன் உண்மையை மேற்கொள்வது அவனுக்கு அவசியமாகும். பௌதீக அமைப்பின் முழுமையும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. உண்மையை

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

## நபிமொழி

**யாசிப்பதற்கு கண்டனமும், அதிலிருந்து விலகியிருக்க கவனமூட்டலும்**

1480: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் கயிற்றை எடுத்துக் கொண்டு காலைப்பொழுதில் மலைக்கு சென்று விறகுகளை ஒன்றுகூட்டி அதனை விற்று, தாமும் சாப்பிட்டுப் (பிறருக்கு) தருமமும் செய்யட்டும். அது அவருக்கு மக்களிடத்தில் யாசிப்பதை விடச் சிறந்ததாகும்.

**தாம் தர்மம் செய்த பொருளைத் தாமே வாங்குவது கூடாது**

1489: ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இறை வழியில் ஒரு குதிரையை தருமமாக வழங்கினார்கள். பின்பு அது விற்கப்படுவதைக் கண்டு தாமே பணம் கொடுத்து அதை வாங்கிட நினைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அன்னார் அனுமதி கேட்டார்கள். அப்போது, நீர் தருமம் செய்ததைத் திரும்பப் பெற வேண்டாம் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**மனிதன் அதில் பிறப்பதற்கும், உண்பதற்கும், குடிப்பதற்கும் பின்னர் மரணித்து விடுவதற்காக மட்டுமே இறைவன் இந்த அளவிற்கு பெரிய உலகத்தை படைத்துள்ளானா? மனித வாழ்க்கை இந்த உலகத்துடன் முடிந்துவிடுமென்றால் அப்படிப்பட்ட சிந்தனை முற்றிலும் அறிவிற்கு எதிரானதாகும்.**

وَمَا خَلَقْنَا السَّمٰوٰتِ وَالْاَرْضَ
وَمَا بَيْنَهُمَآ اِلَّا بِالْحَقِّ ؕ وَاِنَّ السَّاعَةَ لَاٰتِيَةٌ
فَاصْفَحِ الصَّفْحَ الْجَمِيْلَ (15:86)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அதாவது வானம் மற்றும் பூமியின் படைப்பை சீர்தூக்கிப் பாருங்கள். அது நோக்கமற்றதாக தென்படுகின்றதா? அதன் படைப்பின் மீது சீர்தூக்கிப் பார்க்கும்போது இந்த அளவிற்கு பெரிய அமைப்பு என்ன நோக்கத்திற்காக உள்ளது? என்பதை அறிவுடைய ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். இதிலிருந்து ساعة (கியாமத்) நிச்சயமாக வர இருக்கின்றது என்ற முடிவிற்கு வர முடியும். ساعة என்ற சொல் கியாமத் என்ற பொருளில் பயன்படுகின்றது. மேலும் நபிமார்களின் எதிரிகளின் அழிவிற்கு வாக்களிக்கப்பட்ட நேரத்திற்காகவும் நபிமார்களை ஏற்றுக் கொண்டவர்களின் முன்னேற்றத்திற்காகவும் அது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வசனத்தின் முதல் இரண்டு பகுதி இரண்டு ساعة குறித்தும் ஆதாரமாக உள்ளது. பூமி, வானம் ஆகியவற்றின் படைப்பு கியாமத்திற்கான சான்றாகும். மேலும் நபிமார்களின் வெற்றிக்கும் அவர்களின் எதிரிகளின் அழிவிற்கும் சான்றாக உள்ளது. கியாமத்திற்கு சான்றாக உள்ளது. மனிதன் அதில் பிறப்பதற்கும், உண்பதற்கும், குடிப்பதற்கும் பின்னர் மரணித்து விடுவதற்காக மட்டுமே இந்த அளவிற்கு பெரிய உலகத்தை இறைவன் படைத்துள்ளானா? மனித வாழ்க்கை இந்த உலகத்துடன் முடிந்துவிடுமென்றால் அப்படிப்பட்ட சிந்தனை முற்றிலும் அறிவிற்கு எதிரானதாகும்.

இந்த அளவிற்கு பெரிய அமைப்பை படைத்தது ஒரு மாபெரும் நோக்கத்திற்காகவே இருக்க முடியும். அந்த

(தொடர்ச்சி 10 வது பக்கம்.....)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 01 அக்டோபர் 2021 (முழுவதுமாக)*

*கேள்வி–பதில்: ஹுஸூர் (அய்ய)*

*ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் பங்களாதேஷ் வாக்ஃபீன் நவ் பிள்ளைகளின் காணொலி சந்திப்பு*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் இஸ்லாமிய பேரரசின் வட்டம் தொலைதூர பகுதிகளின் எல்லைகளை தொடத் துவங்கியது. இஸ்லாமிய பேரரசு கிழக்கில் கிஹோன் நதி மற்றும் சிந்து நதி வரையிலும் மேற்கில் ஆஃப்ரிக்காவின் சஹாரா பாலைவனம் வரையிலும், வடக்கில் அனடோலியன் மலைகள் மற்றும் ஆர்மீனியா வரையிலும் தெற்கே பசிபிக் பெருங்கடல் மற்றும் நுபியா வரையிலும் ஓர் உலகளாவிய நாடு என்ற வடிவில் உலக வரைபடத்தில் இடம் பெற்றிருந்தது**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஃபர்மா போர், பில்பீஸ் மற்றும் உம்துனைன் வெற்றி, ஃபுஸ்தாத் போர், இஸ்கன்தரியா, பர்கா, தராபல்ஸ் வெற்றி ஆகியவற்றின் முழுமையான விளக்கம். மேலும் ஹஸ்ரம் உமர் (ரலி) அவர்களின் கட்டளையின்படி இஸ்கந்தரியா நூலகம் எரிக்கப்பட்டது என்ற மேற்கத்திய எழுத்தாளர்களின் ஆட்சேபனைக்கு பதில்**

**துன்பங்களும், கஷ்டங்களும் நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருங்கக்கூடியவர்களாக ஆக்கி விட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மேலும் இதுவே வெற்றிகளுக்கான வழிமுறையாக ஆகி விடுகின்றன. ஒருவேளை நாம் இந்த விஷயங்களிலிருந்து நாம் அஞ்சிக் கொண்டு பின்தங்கி இருந்தால் மேலும் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் பின்னர் முன்னேற்றம் ஏற்பட முடியாது. எனவே வெற்றிகள் கிடைத்து விடும்போதும், துன்பங்கள் முடிந்து விடும்போதும் நமக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்க வேண்டும். ஆயினும் இந்த நாட்களில் குறிப்பாக அல்லாஹ்வின் பக்கம் அதிக கவனம் இருக்க வேண்டும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 அக்டோபர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சொற்பொழிவில் தப்லீக் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்து சம்பவங்களை குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நடைபெற்ற போர்களில் பெரும்பாலும் முஸ்லிம் (போர் வீரர்)களுக்கு தட்டுப்பாடு இருந்தது. சிரியா போரில் சிப்பாய்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. எதிரிகள் மிக அதிக எண்ணிக்கையில் உள்ளனர். எனவே மேலும் படைகளுக்கான ஏற்பாடுகள் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆய்வு செய்தபோது (படைக்கு) ஆள் சேர்ப்பது சாத்தியமில்லை என்பது தெரிய வந்தது. ஏனென்றால் அரேபியாவில் சுற்றியிருந்த கோத்திரங்களின் இளைஞர்கள் ஒன்று போரில் கொல்லப்பட்டிருந்தார்கள் அல்லது ஏற்கனவே படையில் அனைவருமே சேர்ந்திருந்தார்கள். அன்னார் ஆலோசனைக்காக ஒரு கூட்டத்தை கூட்டினார்கள். மேலும் பல்வேறு கோத்திரத்தைச் சேர்ந்த மக்களை அதில் அழைத்தார்கள். அவர்களுக்கு முன்னால் இந்த விவகாரத்தை வைத்தார்கள். ஒரு கோத்திரம் உள்ளது. அதில் சில நபர்கள் கிடைக்கக் கூடும் என்று அவர்கள் (ஆலோசனை) கூறினர். உடனடியாக அந்த கோத்திரத்திலிருந்து இளைஞர்களை ஒன்றுகூட்டும்படி ஓர் அதிகாரிக்கு (ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்) கட்டளையிட்டார்கள். மேலும் நான் உங்களின் உதவிக்காக 6000 போர் வீரர்களை அனுப்புகிறேன். அவர்கள் சில நாட்களில் உங்களிடம் வந்தடைவார்கள். இன்ன இன்ன கோத்திரத்திலிருந்து 3000 நபர்களை உங்களிடம் நான் அனுப்புகின்றேன். மீதமுள்ள 3000 வீரர்களுக்கு சமமாக அம்ர் பின் மஃதி கரிப் அவர்களை அனுப்புகின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஓர் இளைஞரை 3000 நபர்களுக்கெதிரில் அனுப்பினால், அது அறிவுக்கு எதிராக இருக்கிறது. கலீஃபாவின் அறிவு செயலிழந்து விட்டதா? ஒரு நபர் 3000 நபர்களை எப்படி எதிர்கொள்ள முடியும்? என்று அவர் கூறுவார். ஆனால் அந்த மக்களின் ஈமான் உறுதியானதாக இருந்தது.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதம் கிடைத்தது. அப்போது அன்னார் அதனை படித்து விட்டு தனது போர் வீரர்களிடம் மகிழ்ச்சியடையுங்கள். அம்ர் பின் மஃதி கரிப் உங்களிடத்தில் வருகின்றார் என்று கூறினார்கள். போர் வீரர்கள் அடுத்த நாள் மகிழ்ச்சியுடன் அம்ர் பின் மஃதி கரிப் அவர்களை வரவேற்றார்கள். மேலும் முழக்கமிட்டார்கள். முஸ்லிம்களின் உதவிக்காக ஒரு லட்சம், இரண்டு லட்சம் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே தான் இந்த அளவிற்கு மகிழ்ச்சியாக உள்ளனர் என்று எதிரிகள் புரிந்து கொண்டனர். ஆனால் அம்ர் பின் மஃதி கரிப் தனித்தவராக இருந்தார். அதன் பிறகு அந்த மூவாயிரம் படைகளும் வந்தடைந்து விட்டன. முஸ்லிம்கள் எதிரிகளை வீழ்த்தினர். உள்ளபடியே வாளேந்தி செய்யப்படும் போரில் ஒரு நபர் மூவாயிரம் நபர்களை எப்படி எதிர்கொள்ள முடியும்?

அன்னார் கூறுகின்றார்கள்: நாவளவிலான போரில் ஒரு நபர் பல ஆயிரம் மக்களுக்கு தமது கூற்றை எட்ட வைக்க முடியும். ஆனால் அந்த மக்கள் காலத்தின் கலீஃபாவின் கூற்றிற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் வழங்கி வந்தார்கள் என்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அம்ர் பின் மஃதி கரிப் அவர்களை 3000 போர் வீரர்களின் பிரதிநிதியாக ஆக்கி அனுப்பியபோது ஒரு தனி நபர் எவ்வாறு 3000 நபர்களை எதிர்கொள்ள முடியும்? என்று படை வீரர்கள் எவரும் ஆட்சேபனை செய்யவில்லை. மாறாக, அவரை 3000 நபர்களுக்கு சமமானவராகவே கருதினர். மேலும் மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் அவரை வரவேற்றனர். முஸ்லிம்களின் இந்த வரவேற்பின் காரணமாக எதிரியின் உள்ளம் அச்சத்திற்குள்ளானது. முஸ்லிம்களின் உதவிக்காக ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் படை வீரர்கள் வந்து விட்டனர் என்று அவர்கள் (எதிரிகள்) கருதினர். அதன் காரணமாக போர் மைதானத்திலிருந்து அவர்களின் பாதங்கள் தடுமாறி விட்டன. மேலும் அவர்கள் தோல்வியுற்று ஓடிவிட்டனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இதேபோன்று நாமும் நமது உள்ளத்திற்கு மனநிறைவை அளிக்க வேண்டும்.

(ஸ்பெயின் அவ்ர் சிலி மே தப்லீகே இஸ்லாம் அவ்ர் ஜமாஅத்தே அஹ்மதிய்யா, அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 359, 360)

ஐரோப்பாவிலும், ஸ்பெயினிலும், சிசிலி போன்ற நாடுகளிலும் எவ்வாறு தப்லீக் செய்ய வேண்டும்? என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தார்கள். தற்போது நான் எகிப்து வெற்றி குறித்து குறிப்பிடுகின்றேன். இதில் ஃபார்மா என்ற போர் நிகழ்ந்தது. ஃபார்மா என்பது எகிப்தின் ஒரு பிரபலமான நகரமாக இருந்தது. இது மத்திய தரைக் கடல் மற்றும் பலூஸி நகரத்தின் வலது பக்கத்திலும், நைல் நதியின் ஏழு கிளைகளில் ஒரு கிளையாகவும் இருந்தது. ஒரு மலையில் அந்த நகரம் அமைந்திருந்தது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 556, 557 – கராச்சியிலுள்ள உருது பாஸார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது

அல்லாமா ஷிப்லி நுஃமானி அவர்களைப் பொறுத்தவரை பைத்துல் முகத்தஸ் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின்

வலியுறுத்தலின் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்ளுக்கு 4000 படைகளை வழங்கி எகிப்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஆயினும் அத்துடன் எகிப்தை அடைவதற்கு முன்னால் எனது கடிதம் கிடைத்து விட்டால் திரும்பி வந்து விட வேண்டும் என்றும் கட்டளை வழங்கினார்கள். அரீஷ் என்ற இடத்தை அடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதம் கிடைத்தது. நான் அவர்களை முன்னேறிச் செல்வதிலிருந்து தடுத்திருந்தேன். ஆயினும் கட்டளை நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது. தற்போது நாம் எகிப்தின் எல்லையை அடைந்து விட்டோம். அரீஷ் என்று இடத்திலிருந்து ஃபர்மாவை அடைந்து விட்டார்கள்.

(அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 160 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அல்இக்திஃபா என்ற ஒரு புத்தகம் இஸ்லாமிய போர்களை உள்ளடக்கியதாக உள்ளது. அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ரஃபஹ் என்ற இடத்தை அடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதம் அன்னாருக்கு கிடைத்தது. இந்த கடிதத்தில் திரும்பிச் செல்வதற்கான கட்டளை இருந்திருக்கக் கூடாதே? என்ற அச்சத்தால் தூதுவரிடமிருந்து கடிதத்தை அன்னார் பெறவில்லை. எந்த அளவுக்கென்றால் அன்னார் ரஃபஹ் மற்றும் அரீஷ் ஆகிய இடங்களுக்கு மத்தியில் இருந்த ஒரு சிறிய ஊரை அடைந்தார்கள். அது குறித்து கேட்டார்கள். அப்போது இது எகிப்தின் எல்லையாகும் என்று கூறப்பட்டது. எனவே அன்னார் கடிதத்தை பெற்றுக் கொண்டார்கள். மேலும் அதை படித்தார்கள். உங்களுடன் இருக்கின்ற முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு நீங்கள் திரும்பி வந்து விடுங்கள் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. எனவே அன்னார் தன்னுடன் இருந்த மக்களிடம் இந்த கிராமம் எகிப்தில் உள்ளது என்பதை நீங்கள் அறிவதில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஆம். சரிதான் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அமீருல் மூமினீன் அவர்கள் இந்த கட்டளையை வழங்கியுள்ளார்கள். அதாவது எனக்கு அன்னாரின் இந்த கடிதம் எகிப்து தேசத்தை அடைவதற்கு முன்பாக கிடைத்து விட்டால் திரும்பி வரும்படி கட்டளையிட்டுள்ளார்கள். எனக்கு இந்த கடிதம் எகிப்து தேசத்தில் நுழைந்த பிறகு கிடைத்துள்ளது. எனவே அல்லாஹ்வின் பெயரைக் கூறி புறப்படுங்கள் என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் பாலஸ்தீனத்தில் இருந்தார்கள். அனுமதியின்றி தமது தோழர்களை அழைத்துக் கொண்டு எகிப்து சென்றடைந்து விட்டார்கள். இந்த விஷயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு இந்த கடிதத்தை எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதம் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு அன்னார் அரீஷ் நகரத்திற்கு அருகில் இருந்தபோது கிடைத்தது. எனவே அன்னார் அரீஷ் நகரத்தை அடைந்திராத வரை அந்தக் கடிதத்தை படிக்கவில்லை. அதன் பின்னர் படித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புறமிருந்து அம்ர் பின் ஆஸ் அவர்களின் பெயரில் அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

அம்மா பஃது. நிச்சயமாக நீங்கள் எகிப்திற்கு உங்களது தோழர்களுடன் சென்றுள்ளீர்கள். அங்கு ரோமானியர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. உங்களுடன் குறைவான தோழர்களே உள்ளனர். எனது வயதின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களுக்கு நன்மை செய்யட்டும். நீங்கள் அவர்களை அழைத்துச் செல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். எனவே நீங்கள் எகிப்தை அடையவில்லையென்றால் திரும்பி வந்து விடுங்கள்.

(அல்இக்திஃபா.... தொகுதி 2 பக்கம் 324, 325 இஸ்திஹ்லாஃப் உமர் பின் கத்தாப் – ஹிஜ்ரி 1420 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்தப் பயணத்தில் ஃபார்மா என்ற இடத்தை அடைவதற்கு முன் எந்தவொரு ரோமானிய போர் வீரரையும் இஸ்லாமிய படை சந்திக்கவில்லை. மாறாக, பல்வேறு இடங்களில் எகிப்தியர்கள் அவர்களை வரவேற்றனர். முதன் முதலில் ஃபார்மாவில் சண்டை நிகழ்ந்தது.

இது பல்வேறு அறிவிப்புகளாகும். ஆனால் இந்த அறிவிப்பே சரியானதாக தோன்றுகின்றது. அதாவது எகிப்தின் எல்லையான அரீஷ் என்ற நகரத்தை அடைந்த பிறகு அன்னாருக்கு கடிதம் கிடைத்தது. அவ்வாறில்லையென்றால் நாங்கள் எகிப்தை அடைந்து விட்டு கடிதத்தை திறப்போம் என்று சாக்குபோக்கு கூறியிருக்க முடியாது. எவ்வாறிருப்பினும் அவர்கள் எகிப்தை அடைந்தார்கள். பின்னர் முன்னேற இருந்தார்கள். ஏனென்றால் நம்பிக்கையாளரின் பாதம் பின்வாங்குவது கிடையாது.

ஹஸ்ரத் அம்ர் அவர்களுடன் வந்துள்ள படை மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ளது. மேலும் குறிப்பிடத்தகுந்த போர் ஏற்பாடுகள் இல்லை என்பதையும், அதிக நாட்கள் முற்றுகையிட முடியாது என்ற செய்தியும் ரோமானியர்களுக்கு கிடைத்தது. அவர்களை விட நாம் அதிக எண்ணிக்கையில் உள்ளோம். மேலும் அதற்கான ஆயத்தங்களை நாம் செய்கின்றோம். அவர்களை நாம் பின்வாங்கச் செய்து விடுவோம் என்று அவர்கள் கருதினர். எனவே இந்த எண்ணத்துடன் ரோமானியர்கள் நகரத்தின் கோட்டைக்குள் அடைபட்டு விட்டனர். மற்றொரு பக்கம் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு ரோமானியர்களின் இராணுவ பலத்தைப் பற்றிய தகவல் கிடைத்திருந்தது. நம்மை விட ஆயுதத்திலும், எண்ணிக்கையிலும் அவர்கள் பல மடங்கு அதிகம் உள்ளனர் என்பதை அன்னார் அறிந்து கொண்டார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் ஃபார்மாவை கைப்பற்றுவதற்காக திட்டம் தீட்டினார்கள். திடீர் தாக்குதல் தொடுத்து கோட்டையின் கதவுகளை திறந்து விட வேண்டும் அல்லது நகரவாசிகளின் உணவு தீர்ந்து விடும் வரை முற்றுகையிட்டு இருக்க வேண்டும். பசியின் காரணமாக நிம்மதியிழந்து அவர்கள் வெளியே வந்து விட வேண்டும் என்று அன்னார் திட்டம் தீட்டினார்கள். எனவே முற்றுகையிட்டார்கள்.

ஒரு பக்கம் முஸ்லிம்களின் முற்றுகை கடினத்திலும் கடினமானதாக ஆகிக் கொண்டே சென்றது. மற்றொரு பக்கம் ரோமானியர்களும் தமது பிடிவாதத்தால் பின்வாங்கவில்லை. இவ்வாறு முற்றுகை பல மாதங்கள் வரை நீண்டு கொண்டிருந்தது. எப்போதாவது ரோமானிய படை வெளியே வந்து சிறிய தாக்குதலை தொடுத்து பின்னர் பின்வாங்கிக் கொண்டே சென்றது. இந்த சிறு தாக்குதல்களில் முஸ்லிம்களே மேலோங்கி இருந்தனர். ஒரு நாள் ரோமானிய படைகளின் ஒரு சிறு பிரிவு ஊரிலிருந்து வெளியே வந்து முஸ்லிம்களுடன் சண்டையிட புறப்பட்டது. அந்தப் போரில் முஸ்லிம்கள் மேலோங்கி இருந்தனர். ரோமானியர்கள் தோல்வியுற்று ஊரின் பக்கம் ஓடினார்கள். முஸ்லிம்கள் அவர்களை பின்தொடர்ந்தனர். மிகவும் வேகமாக ஓடக்கூடியவர்கள் நாங்கள் என்று ரோமானியர்கள் சான்று பகர்ந்தனர். ரோமானியர்கள் கதவுகள் வரை சென்றடைவதற்கு முன்பாகவே சில மக்கள் அங்கு சென்று அரண்மனையின் வாசல்களை திறந்து விட்டனர். தெளிவான வெற்றிக்கான பாதையை சுத்தம் செய்தனர்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 755, 756 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது)

பில்பீஸ் வெற்றி. இது எவ்வாறு நிகழ்ந்தது? ஃபார்மாவிற்குப் பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் பில்பீஸ் நகரத்தின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். அப்போது ரோமானிய படை அன்னாரின் வழிப்பாதையை தடுத்து நிறுத்தியது. பில்பீஸ் என்பது கஸ்தாத் நகரத்திலிருந்து சுமார் 30 மைல் தொலைவில் சிரியாவின் வழியில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் பாபிலியோன் கோட்டை வரை சென்றடைந்துவிடக் கூடாது என்பதற்காக வழிப் பாதை தடுத்து நிறுத்தப்பட்டது. பாபிலோன் என்ற பெயர் பழைய அகராதியில் எகிப்திய நகரங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கஸ்தாத் என்ற நகரம் எங்கு குடியமர்த்தப்பட்டதோ அந்த இடம் அதற்கு முன்பு பாபில்யூன் என்று கூறப்பட்டிருந்தது. ரோமானிய படை அங்கேயே போரிட விரும்பியது. ஆனால் நாங்கள் எங்களது கூற்றை உங்களுக்கு முன் வைக்காத வரை நீங்கள் தற்போது அவசரம் காட்டாதீர்கள். ஏனென்றால் நாளை எந்த சாக்குப்போக்கிற்கும் வாய்ப்பு கிடைத்து விடக் கூடாது என்று ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். நீங்கள் உங்கள் புறமிருந்து அபூமர்யம் மற்றும் அபூமர்யாம் ஆகியோரை தூதுவர்களாக என்னிடத்தில் அனுப்புங்கள் என்றும் கூறினார்கள்.

எனவே அந்த மக்கள் போரிடுவதிலிருந்து விலகிக் கொண்டார்கள். அந்த இரண்டு தூதுவர்களையும் அனுப்பி விட்டார்கள். இந்த இரண்டு தூதுவர்களும் பில்பீஸ்வாசிகளின் துறவியாக இருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அவர்களுக்கு முன்னால் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கும் அல்லது ஜிஸ்யா வரி கொடுப்பதற்கும் ஆலோசனை வழங்கினார்கள். மேலும் அத்துடன் எகிப்து வாசிகளைக் குறித்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றையும் முன் வைத்தார்கள். நீங்கள் எகிப்தை வெற்றி கொள்வீர்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அது எப்படிப்பட்ட நாடு என்றால் அங்கு கராத் என்ற விஷயம் நடைமுறையில் இருந்தது. எனவே நீங்கள்

எகிப்தை வெற்றி கொண்டு விட்ட பிறகு அங்கு இருப்பவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் கருணை மற்றும் நல்லொழுக்கம் அவர்களின் கடமையாகும். இந்த இரண்டு தூதுவர்களும் இது மிக நீண்ட கால உறவாகும். இதனை நபிமார்களால் மட்டுமே முழுமை செய்ய முடியும். எங்களை செல்ல விடுங்கள். நாங்கள் திரும்பி வந்து கூறுவோம் என்று அந்த இரு தூதுவர்களும் கூறினர்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னைப் போன்ற மனிதரை ஏமாற்ற முடியாது. நான் உங்களுக்கு மூன்று நாட்கள் காலக்கெடு வழங்குகின்றேன். நீங்கள் இந்த விவகாரத்தை மிக நல்ல முறையில் சிந்தித்து பாருங்கள். அதற்கு, மேலும் ஒரு நாள் கூடுதலாக காலக்கெடு வழங்குங்கள் என அந்த இரு தூதுவர்களும் கூறினர். அன்னார் மேலும் ஒரு நாள் கூடுதலாக அவர்களுக்கு அவகாசம் வழங்கினார்கள். இரண்டு தூதுவர்களும் திரும்பி வந்து கிஸ்தியூனின் தலைவரான மகூகஸ் மற்றும் ரோமானிய அரசர் சார்பாக எகிப்தின் அரசரான அர்தபூனிடம் வந்தனர். முஸ்லிம்களின் கூற்றுகளை அவனிடம் எடுத்து வைத்தார்கள். அர்தபூன் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான். போருக்கான உறுதியான எண்ணம் கொண்டு இரவோடு இரவாக முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தினான். அர்தபூனின் இந்தப் படையின் எண்ணிக்கை 12 ஆயிரம் என்று கூறப்படுகின்றது. முஸ்லிம்களின் ஒரு பெரும் எண்ணிக்கை போரில் ஷஹீதாகி விட்டது. ரோமானியர்களின் ஓராயிரம் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 3000 வீரர்கள் கைது செய்யப்பட்டனர். அர்தபூன் போர் மைதானத்தை விட்டு ஓடி விட்டான். அவன் அந்த போரிலேயே கொல்லப்பட்டான் என்று சிலர் கூறுகின்றனர்.முஸ்லிம்கள் அவனை அவனது படையுடன் இஸ்கந்தரியாவில் தோற்கடித்தனர். முஸ்லிம்கள் பில்பீஸ் நகரத்தில் ஒரு மாதம் வரை தங்கினர் என்பதிலும் இதற்கிடையில் போர் நடந்து வந்தது என்பதிலும் இறுதியில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது என்பதிலும் வரலாற்று ஆசிரியர்கள் உடன்பட்டுள்ளனர். எனினும் இந்தப் போர் மிகத் தீவிரமாக இருந்ததா? அல்லது மிகக் குறைவாக இருந்ததா? என்பதிலேயே கருத்து வேறுபாடு உள்ளது.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 757, 758 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது & முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 564, 565 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & அல்இக்திஃபா.... தொகுதி 2 பக்கம் 346 இஸ்திஹ்லாஃப் உமர் பின் கத்தாப் – ஹிஜ்ரி 1420 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 567 பில்பீஸ் – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & இட்லஸ் ஃபதூஹாத்தே இஸ்லாமியா தொகுதி 2 பக்கம் 225 – ஹிஜ்ரி 1428 ஆம் ஆண்டு தாருஸ் ஸலாம் ரியாஸில் அச்சிடப்பட்டது)

இந்தப் போர் பதற்றத்திற்கு மத்தியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அது முஸ்லிம்களின் புத்திசாலித்தனத்திற்கும் நல்லொழுக்க நிலைக்கும் சான்றாகும். சம்பவம் இவ்வாறு வருகின்றது.

பில்பீஸில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கியபோது அதில் மகூகஸின் மகள் கைது செய்யப்பட்டார். அவரது பெயர் அர்மா ஆகும். அவர் தமது தந்தைக்கு ஒரே மகளாக இருந்தார். அவரது தந்தை கிஸ்தன்தீன் பின் ஹிர்குலிற்கு அவரை மணமுடித்துக் கொடுக்க விரும்பி இருந்தார். ஆனால் அவருக்கு அந்த திருமணத்தில் விருப்பமில்லாமல் இருந்தது. எனவே அவர் தனது பணிப்பெண்ணுடன் நடைபயணமாக பில்பீஸ் நகரத்திற்கு வந்திருந்தார். எவ்வாறிருப்பினும் முஸ்லிம்கள் அவரை கைது செய்தபோது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அனைத்து சஹாபிகளையும் ஒரு கூட்டத்தில் ஒன்று கூட்டினார்கள்.

அவர்களுக்கு هَلْ جَزَاءُ الْإِحْسَانِ إِلَّا الْإِحْسَانُ (நன்மைக்கு ஈடு நன்மையேயன்றி வேறுண்டா?) என்ற அல்லாஹ்வின் கூற்றை ஓதிக் காட்டினார்கள்.

பின்னர் هَلْ جَزَاءُ الْإِحْسَانِ إِلَّا الْإِحْسَانُ என்ற இந்த வசனத்தின் அடிப்படையில் கூறினார்கள். மகூகஸ் நமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கி இருந்தார். இந்தப் பெண்ணையும், இந்தப் பெண்ணிற்கு தொண்டாற்றுவதற்காக உடன் இருக்கின்ற ஏனைய பெண்களையும், நமக்கு கிடைத்த செல்வங்களையும், இவை அனைத்தையும் மகூகஸிடம் அனுப்பிவிட வேண்டும் என்பது எனது கருத்தாகும். அனைவரும் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் கருத்தை சரியானதாக ஏற்றுக் கொண்டனர். பின்னர் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மகூகஸின் மகளான அர்மா நூஸாவையும் அவரது அனைத்து ஆபரணங்களையும் மேலும் ஏனைய அனைத்து பணிப்பெண்களையும் மிகவும் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் அவரது தந்தையிடம் அனுப்பி விட்டார்கள். திரும்பிச் சென்றபோது அவரது பணிப்பெண் அர்மா நூஸாவிடம் இவ்வாறு கூறினார்.

நாம் எல்லா புறத்திலிருந்தும் அரபிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றோம். அதற்கு, நான் அரேபிய கூடாரத்தில் உயிர் மற்றும் கண்ணியத்திற்கான பாதுகாப்பு இருப்பதாக கருதுகின்றேன். ஆனால் எனது தந்தையின் கோட்டையில் எனது உயிருக்கு பாதுகாப்பு இருப்பதாக நான் கருதவில்லை என்று அர்மா நூஸா கூறினார். பின்னர் அவர் தமது தந்தையிடம் வந்தபோது அவருடன் முஸ்லிம்கள் நடந்து கொண்ட நடைமுறையைப் பார்த்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 757, 759 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது)

அடுத்து உம்துனைன் என்ற ஓர் இடம் உள்ளது. அது வெற்றி கொள்ளப்பட்ட நற்குறிப்பு இவ்வாறாகும். பில்பீஸ் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் பாலைவனத்தின் எல்லையை நோக்கி முன்னேறியவாறு உம்துனைன் என்ற ஊருக்கு அருகில் சென்றடைந்தார்கள். அது நைல் நதியில் தாஜன் வளைகுடாவின் முகப்பிற்கு அருகில் அமைந்துள்ளது. இது சூயஸ் வளைகுடாவிற்கு அருகிலுள்ள எகிப்து நகரத்தை மத்திய தரைக்கடக் கடலுடன் இணைத்திருந்தது. தற்போது அங்கு கெய்ரோ நகரத்தின் உஸ்பக்யா வீதி உள்ளது. அந்தக் காலத்தில் துனைன் ஊராக இருந்தது. அதில் ரோமானியர்கள் கோட்டையை கட்டி வைத்திருந்தார்கள். அதற்கு அருகில் நைல் நதியின் ஒரு துறைமுகம் இருந்தது. அதில் ஏராளமான கப்பல்கள் நின்றிருந்தன. இந்த ஊர் பாபிலியோனின் வடக்கு திசையில் அமைந்திருந்தது. அது எகிப்து நகரத்தின் மாபெரும் கோட்டையாக இருந்தது. துனைன் எகிப்து நகரத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஊராக இருந்தது. கடந்த காலங்களில் ஃபிர்அவ்ன்களின் தலைநகரமாக இருந்த எகிப்தியர்களின் விருப்பத்திற்குரிய பகுதியாகவும் இது இருந்தது. இதுவே முதல் பாதுகாப்பு முகாமாக கூறப்படுகின்றது. உன்துனைன் என்ற இடத்திற்கு அருகில் சென்று முஸ்லிம்கள் முகாமிட்டுக் கொண்டனர். ரோமானியர்கள் பாபிலியோன் கோட்டையில் தமது சிறந்த படையை கொண்டு சேர்த்திருந்தார்கள். உன்துனைனின் கோட்டையை மிகச் சிறந்த முறையில் வலிமையாக்கிக் கொண்டு போருக்காக ஆயத்தமாகி இருந்தார்கள். ஒற்றர்களின் செய்திகளிலிருந்து தமது படை பாபிலியோனை வெற்றி கொள்வதற்கோ அல்லது அதனை முற்றுகையிடுவதற்கோ போதுமானதல்ல என்பதை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கணித்துக் கொண்டார்கள். அன்னார் ஒரு தூதுவரின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து மதீனாவிற்கு அனுப்பினார்கள். அதில் தமது எகிப்து பயணத்தின் நிலவரங்கள், கோட்டைகளின் விளக்கங்கள் மற்றும் அதன் மீது தாக்குதல் தொடுப்பதற்கு தேவையான உதவிப் படைகளின் அவசியத்தை வெளிப்படுத்தி இருந்தார்கள். மற்றொரு பக்கம் உதவிப் படைகள் மிக விரைவில் வந்தடைய இருக்கின்றன என்று படையில் அறிவித்து விட்டார்கள்.

இதன் பிறகு உம்துனைனை நோக்கி முன்னேறினார்கள். அதனை முற்றுகையிட்டுக் கொண்டு கோட்டையில் உணவு மற்றும் படைக்கு தேவையான அடிப்படை பொருட்கள் சென்று சேர்வதை தடுத்து விட்டார்கள். பாபிலியோன் கோட்டையில் அடைபட்டிருந்த ரோமானியர்கள் அங்கு வருவதற்கு முயற்சி செய்தனர். ஏனென்றால் பில்பீஸ் நகரத்தில் அர்தபூனின் முடிவை அவர்கள் கண்டிருந்தார்கள். அரேபியர்களுடன் திறந்த வெளியில் சண்டையிடுவது அவர்களின் சக்திக்குட்பட்டது கிடையாது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். உம்துனைனின் படைகள் சில முறை வெளியில் வந்தது. மேலும் தோல்வியுற்ற தாக்குதல்களுக்குப் பிறகு திரும்பி சென்று விடும். பல வாரங்கள் இவ்வாறே கடந்து விட்டன. இதற்கிடையில் கிலாஃபத் அவையிலிருந்து முதல் உதவிப்படை அனுப்பி வைக்கப்பட்டு விட்டது என்ற செய்தி கிடைத்தது. அது விரைவில் வந்தடைந்து விடும் என்ற செய்தியும் கிடைத்தது. இந்த செய்தியால் முஸ்லிம்களின் தைரியமும், ஆற்றலும் வலுப்பெற்றது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 567 – 570 – லாஹூரிலுள்ள உருது பாஸார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய படையின் உதவிக்காக 4000 போர் வீரர்களை அனுப்பினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு ஆயிரம் நபர்களுக்கும் ஓர் அமீரை

நியமித்திருந்தார்கள். இந்த அமீர்மார்களின் பெயர்கள் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி), ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி), ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி), ஹஸ்ரத் மஸ்லமா பின் முகல்லத் (ரலி) ஆகும். ஓர் கூற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் மஸ்லமா பின் முகல்லத் அவர்களின் இடத்தில் கார்ஜா பின் ஹுஸாஃபா அமீராக இருந்தார்கள் என்று வந்துள்ளது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த படையை அனுப்பியதுடன் இனி உங்களுடன் 12000 முஜாஹிதீன்கள் உள்ளனர் என்று ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். இந்த எண்ணிக்கை குறைவின் காரணமாக ஒருபோதும் தோல்வியுறாது. ரோமானிய படை வீரர்கள் கப்தியூனியர்களுடன் முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக புறப்பட்டார்கள். இரண்டு படைகளுக்கு மத்தியிலும் கடுமையான சண்டை நிகழ்ந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் நுட்பமான செயல் திட்டத்துடன் தமது படையை மூன்று பிரிவுகளாக பிரித்தார்கள். ஒரு பிரிவு, ஹபலி அஹ்மர் என்ற இடத்திற்கு அருகில் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. இரண்டாவது பகுதி, உம்துனைனிற்கு அருகில் நைல் நதியின் கரையோரத்தில் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. மேலும் படையின் எஞ்சிய பகுதி எதிரியை எதிர்ப்பதற்காக புறப்பட்டது. இரண்டு படைகளுக்கு மத்தியிலும் கடுமையான போர் நடந்து வந்தபோது ஹபலி அஹ்மரில் ஒளிந்திருந்த படை வெளியேறி பின்புறமிருந்து தாக்குதல் நடத்தியது. அதனால் எதிரிப் படையின் அமைப்பு சிதறுண்டு போனது. மேலும் அவர்கள் உம்துனைனை நோக்கி ஓடினார்கள். அங்கு இஸ்லாமிய படையின் இரண்டாவது பிரிவு தயாராக இருந்தது. அது அவர்களின் வழியை தடுத்து நிறுத்தியது. இவ்வாறு ரோமானிய படை முஸ்லிம்களின் மூன்று படைகளுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டது. மேலும் எதிரிக்கு தோல்வி ஏற்பட்டது.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 759 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது)

பல்வேறு வெற்றிகளைக் குறித்து இவ்வாறு குறிப்பு உள்ளது. அதாவது உம்துனைனின் வெற்றிக்குப் பிறகு முதன் முதலில் ஃபய்யூம் பகுதியில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் வெற்றி பெற்றார்கள். இந்தப் பகுதிகளின் தலைவர் இந்தப் போரில் கொல்லப்பட்டார்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 571, 572 – லாஹூரிலுள்ள உருது பாஸார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

அடுத்து அன்னுஷ் ஷம்ஸில் ரோமானியர்களுடன் முஸ்லிம்களின் போர் நிகழ்ந்தது. அதற்கு முன்பு முஜாஹிதுகளின் எட்டாயிரம் படைகள் உதவிப் படையாக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை வந்து சந்தித்தது. ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவர்களின் கரங்களில் அந்தப் படையின் தலைமைப் பொறுப்பு இருந்தது. அதில் ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி), ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) மற்றும் மஸ்லமா பின் முகல்லத் (ரலி) ஆகியோரும் இருந்தனர். இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. அதன் பிறகு கய்யூம் பகுதியின் முழு மாநிலத்திலும் முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர். முஸ்லிம்களின் படையின் ஒரு பகுதி மனூஃபியா மாநிலத்தின் இரண்டு நகரங்களான இஸ்ரீப் மற்றும் மனூஃப் பகுதியை வெற்றி கொண்டனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 573, 579 – லாஹூரிலுள்ள உருது பாஸார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது & இட்லஸ் ஃபதூஹாத்தே இஸ்லாமியா தொகுதி 2 பக்கம் 229 – ஹிஜ்ரி 1428 ஆம் ஆண்டு தாருஸ் ஸலாம் ரியாஸில் அச்சிடப்பட்டது)

பாபில்யூன் அல்லது ஃபுஸ்தாத் கோட்டையின் போர் வெற்றி குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் உம்துனைன் வெற்றிக்குப் பிறகு பாபில்யூன் கோட்டையை நோக்கி முன்னேறினார்கள். மேலும் அதனை மிக வலிமையுடன் முற்றுகையிட்டார்கள். தற்போது இந்த பகுதியின் பெயர் குஸ்தாத் ஆகும். அதற்குரிய காரணம் இவ்வாறாகும். அரபியில் கூடாரத்திற்கு குஸ்தாத் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கோட்டையை வெற்றி கொண்ட பிறகு முஸ்லிம்களை இங்கிருந்து இடம் பெயரும்படி கட்டளையிட்டார்கள். அப்போது ஒரு புறா ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களின் கூடாரத்தில் கூடு ஒன்று கட்டியிருந்தது. அன்னாரின் பார்வை அதன் மீது பட்டபோது இந்தக் கூடாரத்தை அங்கேயே விட்டு விடும்படி கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் இஸ்கந்தரியாவிலிருந்து திரும்பி வந்து அதே கூடாரத்திற்கு அருகில் நகரத்தை குடியமர்த்தினார்கள். எனவே இந்த நகரம் குஸ்தாத் என்ற பெயரால் பிரபலமாகி விட்டது.

(ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 150, 151 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

கோட்டையிலிருந்த பாதுகாப்பு படைகளின் எண்ணிக்கை 5000 முதல் 6000 வரை இருக்கும் என கணிக்கப்பட்டிருந்தது. மேலும் அவர்கள் எல்லா வகையிலும் ஆயுதம் ஏந்தி இருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் பாபில்யூன் கோட்டையை முற்றுகையிட ஆரம்பித்திருந்தார்கள். இஸ்கந்தரியாவிற்குப் பிறகு இது மிகவும் வலிமை வாய்ந்த கோட்டையாக இருந்தது. உறுதியான செங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. நாலா புறமிருந்தும் நைல் நதியின் தண்ணீரால் சூழப்பட்டிருந்தது. அந்தக் கோட்டை நைல் நதியில் அமைந்திருந்தது. மேலும் கப்பல்களும், படகுகளும் கோட்டையின் வாசல்களில் வந்து நின்றிருந்தன. எனவே அரசாங்க தேவைகளின் அடிப்படையில் மிகவும் உகந்த இடமாக அது இருந்தது. இந்த வலிமை வாய்ந்த கோட்டையின் மீது தாக்குதல் நடத்துவதற்கு அரேபியர்களிடம் எந்த ஆயுதமும் இருந்திருக்கவில்லை. அதற்கு அவர்கள் தயாராகவும் இருக்கவில்லை.

(முஹம்மது ரஸா அவர்கள் எழுதிய சீரத் உமர் ஃபாரூக் (ரலி) பக்கம் 264, 265 – 2010 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் அதை முற்றுகையிடுவதற்கான தயாரிப்புகளை செய்தார்கள். எகிப்தின் ஆட்சியாளனாக இருந்த மகூகஸ் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு முன்னால் கோட்டையை வந்தடைந்திருந்தான். மேலும் போருக்கான ஏற்பாடுகளை அவன் செய்து கொண்டிருந்தான். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் குதிரை மீது சவாரி செய்து அகழின் நாலாபுறமும் வலம் வந்தார்கள். எங்கெல்லாம் தேவைகள் இருந்தனவோ அங்கு உரிய எண்ணிக்கையில் சவாரிகளையும், போர் வீரர்களையும் நிறுத்தினார்கள். இந்த முற்றுகை தொடர்ந்து 7 மாதங்கள் வரை நீடித்துக் கொண்டு சென்றது. வெற்றி மற்றும் தோல்விக்கான முடிவு ஏற்படவில்லை.

(ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 150 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இதற்கிடையில் அவ்வப்போது ரோமானிய படை கோட்டையிலிருந்து வெளியே வந்து சண்டையும் செய்து வந்தது. ஆனால் பின்னர் உடனடியாக திரும்பியும் சென்றது. இதற்கிடையில் மகூகஸ் தனது தூதுவர்களை சமாதானம் மற்றும் மிரட்டல் விடும் நோக்கத்தில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம் அனுப்பினான். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். சமாதானம் செய்து கொள்வதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். ஜிஸ்யா வரி கொடுங்கள். அல்லது சண்டை நிகழும். இதைத் தவிர்த்து வேறு எந்த விஷயத்திலும் சமாதானம் ஏற்பட முடியாது. சமாதானம் செய்யக் கூடாது. மகூகஸ் ஜிஸ்யா வரி செலுத்த ஒப்புக் கொண்டு விட்டான். இது தொடர்பாக ஹிர்குலிடம் அனுமதி பெறுவதற்காக அவன் சுயமே ஹிர்குலிடம் சென்றான். ஆனால் ஹிர்குல் அதனை ஒப்புக் கொள்ள மறுத்து விட்டான். மாறாக, மகூகஸின் மீது கடுமையாக கோபமுற்றான். அவனுக்கு தண்டனை வழங்கியவாறு நாட்டை விட்டு வெளியேற்றி விட்டான்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 582, 584, 590 – லாஹூரிலுள்ள உருது பாஸார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது & முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 760 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது)

பாபில்யூன் கோட்டையின் வெற்றி மிகவும் தாமதமாகும் என்று தெரிய வந்தபோது இனி நான் எனது உயிரை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணிக்கப் போகின்றேன் என்று ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் இதன் மூலம் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்குவான் என்று தான் நம்புவதாகவும் அன்னார் கூறினார்கள். இவ்வாறு கூறியவாறு வாளை உருவிக் கொண்டு ஏணியில்

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஏறி கோட்டையின் சுவரில் அமர்ந்து கொண்டார்கள். வேறு சில சஹாபிகளும் அன்னாருக்கு உதவி செய்தார்கள். கோட்டையின் சுவரின் மீது ஏறி நின்று கொண்டு அனைவரும் ஒரு முழக்கமிட்டார்கள். அத்துடன் அனைத்து படையும் முழக்கமிட்டது. அதன் மூலம் கோட்டையின் பூமியே அதிர்ந்து விட்டது. முஸ்லிம்கள் கோட்டையினுள் நுழைந்து விட்டனர் என்று கிறிஸ்துவர்கள் புரிந்து கொண்டனர். அவர்கள் செய்வதறியாது ஓட்டம் பிடித்தனர். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் சுவரிலிருந்து இறங்கி கோட்டையின் வாசலை திறந்து விட்டார்கள். முழு படையும் உள்ளே வந்தது. சண்டையிட்டு சண்டையிட்டு கோட்டையை வெற்றி கொண்டு விட்டார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 760 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 150 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் இந்த நிபந்தனையின் அடிப்படையில் அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். அதாவது ரோமானிய படை தன்னுடன் சில நாட்களுக்கு தேவையான உணவை எடுத்துக் கொண்டு இங்கிருந்து வெளியேறி விட வேண்டும். மேலும் பாபிலியோன் கோட்டையிலுள்ள கருவூலம் மற்றும் போர் தளவாடங்களை அவர்கள் தொடக் கூடாது. ஏனென்றால் அது முஸ்லிம்களின் போர் செல்வங்களாகும். அதன் பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் பாபிலியோன் கோட்டையில் உயரமான கலசங்களை உடைத்து விட்டார்கள். மேலும் உறுதியான சுவர்களையும் உடைத்து விட்டார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 760 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது)

பாபில்யூன் கோட்டையின் வெற்றிக்குப் பிறகு இஸ்லாமிய படை எகிப்தின் பல்வேறு பகுதிகளையும், கோட்டைகளையும் வெற்றி கொண்டது. அதில் கர்னூத், மக்யூஸ், சுல்தைஸ், கிர்யூன் போன்றவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 602, 603, 605, 608 – லாஹூரிலுள்ள உருது பாஸார் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இஸ்கந்தரியா வெற்றி எவ்வாறு நிகழ்ந்தது? இது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஃபுஸ்தாத் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்கந்தரியாவை வெற்றி கொள்வதற்கும் அனுமதி வழங்கி விட்டார்கள். இஸ்கந்தரியா மற்றும் ஃபுஸ்தாத் ஆகிய நகரங்களுக்கு மத்தியில் கிர்யூன் என்ற இடத்தில் ரோமானியர்களுடன் கடுமையான போர் நிகழ்ந்தது. அதில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. அதன் பிறகு இஸ்கந்தரியா வரை ரோமானியர்கள் முன்னால் வரவில்லை. மகூகஸ் ஜிஸ்யா வரி செலுத்தி சமாதானம் செய்து கொள்ள விரும்பியிருந்தான். ஆனால் ரோமானியர்கள் அவனுக்கு அழுத்தம் கொடுத்தனர். அதன் விளைவாக மகூகஸ் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு இந்த தூதுச் செய்தியை அனுப்பினான். அதாவது அவனும் கிஸ்தபி சமுதாயமும் இந்தப் போரில் பங்கு பெறவில்லை. எனவே இதில் எங்களுக்கு எந்த தொல்லையும் தரக்கூடாது. கிஸ்பதி சமுதாயம் இந்தப் போரிலிருந்து விலகி இருந்தது. ஆனால் அதே நேரம் அவர்கள் இஸ்லாமிய படைக்கு உதவி செய்தனர். முஸ்லிம்கள் வழிப்பாதையை சீரக்க தொடங்கினர். பாலத்தை சீர்படுத்தினர். இஸ்கந்தரியா முற்றுகையிலும் கப்தி மக்கள் முஸ்லிம்களுக்கு எளிமையை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இஸ்கந்தரியாவின் முக்கியத்தும் இந்த விஷயத்திலிருந்து தெரிந்து கொள்ள முடியும். அதாவது எந்த நேரத்தில் முஸ்லிம்கள் இஸ்கந்தரியாவை வெற்றி கொண்டார்களோ அந்த தருணத்தில் அந்த நகரம் அரசாங்கத்தின் தலைநகரமாக இருந்தது. கிஸ்தன்தீனியாவிற்குப் பிறகு பாஸன்தீனி ரோமானிய அரசாட்சியின் இரண்டாவது மாபெரும் நகரமாக கருதப்பட்டு வந்தது. அதுமட்டுமின்றி உலகின் முதன்மையான வியாபார நகரமாக இருந்தது. பாஸன்தீனி மக்கள் இந்த விஷயத்தை நன்கு அறிந்திருந்தனர். அதாவது இந்த நகரத்தை முஸ்லிம்கள் வெற்றி கொண்டு விட்டால் அதன் விளைவாக மிக அபாயகரமான விளைவுகள் வெளிப்படும். இந்த கவலையின் நிலையில் ஹிர்குல் எந்த அளவுக்கு கூறியிருந்தான் என்றால் அரேபியார்கள் இஸ்கந்தரியாவை வெற்றி கொண்டு விட்டால் பின்னர் ரோமானியர்கள் அழிந்து விடுவார்கள். இஸ்கந்தரியாவில் முஸ்லிம்களுடன் சண்டையிட ஹிர்குல் சுயமே பங்கு பெறுவதற்காக ஆயத்தம் செய்திருந்தான். ஆனால் தயாரிப்பின் நிலையிலேயே மரணித்து விட்டான். அவனது மகன் கிஸ்தன்தீன் அரசனானான். இஸ்கந்தரியா தனது சுவர்களின் வலிமை, தடிமன், மாளிகையின் அமைப்பு, பாதுகாவலர்களின் மிகுதி ஆகியவற்றின் காரணமாக பாதுகாப்பு அடிப்படையில் தனது ஒரு தனித்தன்மை வாய்ந்த அந்தஸ்தை பெற்றிருந்தது. இஸ்கந்தரியா ஒன்பது மாதங்கள் வரை முற்றுகையிடப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கவலை ஏற்பட்டது. அநேகமாக நீங்கள் அங்கு தங்கி ஆடம்பர விரும்பிகளாக ஆகிவிட்டீர்கள். இல்லையென்றால் வெற்றி கிடைப்பதில் இந்த அளவு காலதாமதம் ஏற்படாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடிதமும் எழுதினார்கள். இந்த தூதுச் செய்தியுடன் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஜிஹாத் செய்வதற்கு சொற்பொழிவு ஆற்றுங்கள். மேலும் தாக்குதல் நடத்துங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுதியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த கடிதத்தை படித்துக் காட்டிய பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்களை அழைத்து கொடியை அன்னாரிடம் ஒப்படைத்தார்கள். முஸ்லிம்கள் மிகக் கடுமையான தாக்குதல் நடத்தினர். மேலும் நகரத்தை வெற்றி கொண்டனர். அப்போதே ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு தூதுவரை அனுப்பினார்கள். மேலும் எந்த அளவிற்கு விரைவாக செல்ல முடியுமோ சென்று அமீருல் மூமினீன் அவர்களுக்கு நற்செய்தி வழங்கி விடும் என்றும் அன்னார் கூறியிருந்தார்கள்.

தூதுவர் ஒட்டகத்தின் மீது அமர்ந்து புறப்பட்டார். மேலும் பல்வேறு இடங்களைக் கடந்து மதீனாவை சென்றடைந்தார். அப்போது மதிய வேளையாக இருந்ததால் இது ஓய்விற்குரிய நேரமாகும் என்ற எண்ணத்தின் காரணமாக கிலாஃபத் அவைக்கு செல்வதற்கு முன் மஸ்ஜிது நபவிக்கு நேராக சென்றார். தற்செயலாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணிப் பெண் அங்கிருந்து வெளியேறினார். மேலும் நீங்கள் யார்? எங்கிருந்து வந்துள்ளீர்கள்? என்று அவர் கேட்டார். தான் இஸ்கந்தரியாவிலிருந்து வருவதாக தூதுவர் கூறினார். பணிப்பெண் அப்போதே சென்று தகவல் கொடுத்தார். மேலும் உடனடியாக திரும்பி வந்து, வாருங்கள்! உங்களை அமீருல் மூமினீன் அவர்கள் அழைக்கின்றார்கள் என்று கூறினார். இதற்கிடையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காத்திருக்காமல் சுயமே செல்வதற்கு தயாரானார்கள். மேலும் ஆடையை அணிந்து கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் தூதுவர் வந்தடைந்து விட்டார். வெற்றியின் செய்தியைக் கேட்டு நிலத்தில் வீழ்ந்து நன்றி சஜ்தா செய்தார்கள். மேலும் எழுந்து பள்ளிக்கு வருகை தந்தார்கள். அஸ்ஸலாத்து ஜாமிஆ என்று அறிவிப்பு செய்தார்கள். இதைக் கேட்ட உடனேயே முழு மதீனாவும் ஒன்று கூடியது. தூதுவர் அனைவருக்கு முன்பும் வெற்றியின் நிலைகளை எடுத்துரைத்தார். இதன் பின்னர் தூதுவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் அன்னாருடைய வீட்டிற்குச் சென்றார். அவருக்கு முன்னால் உணவு வைக்கப்பட்டது. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தூதுவரிடம், நேரடியாக என்னிடம் ஏன் வரவில்லை? என்று கேட்டார்கள். தாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பீர்கள் என்று நான் எண்ணினேன் என்று அவர் கூறினார். அதற்கு என்னைப் பற்றி நீங்கள் ஏன் இவ்வாறு எண்ணம் கொண்டீர்? நான் பகலில் தூங்கினேன் என்றால் கிலாஃபத்தின் சுமையை யார் சுமப்பார்? என்று அன்னார் கூறினார்கள்.

இஸ்கந்தரியாவின் வெற்றியுடன் முழு எகிப்தும் வெற்றி கொள்ளப்பட்டது. இந்தப் போர்களில் அதிகமான நபர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைத்து கைதிகள் தொடர்பாகவும் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுக்கு கடிதம் மூலமாக இவ்வாறு வழிகாட்டினார்கள். அனைவரிடமும் கூறி விடுங்கள். முஸ்லிம்கள் ஆகிவிடுவதற்கும், அல்லது தமது மார்க்கத்தில் நிலைபெறுவதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டால் முஸ்லிம்களுக்கு கிடைக்கக்கூடிய அனைத்து உரிமைகளும் அவர்களுக்கும் கிடைக்கும்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

இல்லையென்றால் ஜிஸ்யா வரி கொடுக்க நேரிடும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த கூற்று கைதிகளுக்கு முன்னால் படித்துக் காட்டப்பட்டது. அப்போது ஏராளமான கைதிகள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டனர். மேலும் ஏராளமான நபர்கள் தமது மார்க்கத்தில் நிலைபெற்றிருந்தனர். ஒரு கைதி இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும்போது அல்லாஹு அக்பர் என்று முஸ்லிம்கள் முழக்கமிட்டு வந்தனர். ஒருவர் கிறிஸ்துவத்தை ஒப்புக் கொள்ளும்போது அனைத்து கிறிஸ்துவர்களும் வாழ்த்துக்கள் என்று கூறும் சப்தம் எழுந்தது. மேலும் முஸ்லிம்கள் மன வேதனை அடைந்தனர்.

(ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 760 – 764 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் டிரஸ்டில் அச்சிடப்பட்டது & ஷிப்லி நுஃமானி அவர்கள் எழுதிய அல்ஃபாருக் என்ற நூல் பக்கம் 162 – 165 – 1991 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

இஸ்கந்தரியாவின் நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் பற்றி சில ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் மிக அழுத்தத்துடன் இதனை பதிவு செய்கின்றனர். இதன் உண்மை நிலை என்ன? இஸ்கந்தரியாவின் வெற்றி தொடர்பாக எதிரிகள் சார்பாக அதிலும் குறிப்பாக கிறிஸ்துவ எழுத்தாளர்கள் சார்பாக ஓர் ஆட்சேபனை செய்யப்படுகின்றது. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்கந்தரியாவில் இருந்த ஒரு மாபெரும் நூலகத்தை எரித்து விடும்படி கட்டளையிட்டிருந்தார்கள். இந்த ஆட்சேபனையின் மூலம் முஸ்லிம்கள் நவூதுபில்லாஹ் எந்த அளவிற்கு கல்விக்கும், அறிவிற்கும் எதிரானவர்களாக இருக்கின்றார்கள் என்று தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு வகையில் முயற்சி செய்யப்படுகிறது. இஸ்கந்தரியாவில் இருந்த மிகப் பெரும் நூலகத்தை முஸ்லிம்கள் எரித்து விட்டனர். அதனால் 6 மாதங்கள் வரை நெருப்பு எரிந்து கொண்டே இருந்தது என்று (அவர்கள்) கூறுகின்றனர். உள்ளபடியே அறிவார்ந்த ரீதியிலும், நடைமுறைக்கேற்பவும் இந்த விஷயம் முற்றிலும் போலியானதாகவும், உருவாக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. ஏனென்றால் எந்த சமுதாயத்திற்கு அவர்களது இறைவனும், அவர்களது தலைவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், طَلَبُ الْعِلْمِ فَرِيْضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ (கல்வி பெறுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்) என்று கூறியுள்ளார்களோ அந்த சமுதாயம் எவ்வாறு இந்த செயலை செய்யும்?

(சுனன் இப்னு மாஜா...... ஹதீஸ் எண் 224)

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

أُطْلُبُوا الْعِلْمَ وَلَوْ بِالصِّيْنِ கல்வி பெறுங்கள். சீனா செல்ல நேரிட்டாலும் சரியே என்று கட்டளை தரப்பட்டுள்ளது.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 10 பக்கம் 138, கிதாபுல் பாபுல் அவ்வல் ஃபித் தர்கீப், ஹதீஸ் எண் 28697 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

மேலும் அறிவையும், சிந்தனையையும் பயன்படுத்தும்படியும், சிந்திக்கும்படியும் திருக்குர்ஆனில் நூற்றுக்கணக்கான வசனங்கள் இருக்கும்போது அதனை ஏற்றுக் கொண்டவர்கள் நூலகத்தை எரித்து விட்டார்கள் என்று குற்றம் சுமத்துவது அறிவு மற்றும் நடைமுறையின் அடிப்படை விதிகளுக்கு எதிரானதாக உள்ளது. இதைத் தவிர்த்து ஏராளமான ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர். அவர்களில் கிறிஸ்துவ மற்றும் ஐரோப்பிய ஆராய்ச்சியாளரும் அடங்குவர். அவர்கள் இந்த விஷயத்தை மறுத்துள்ளனர். மேலும் இஸ்கந்தரியாவின் நூலகத்தை எரிக்கின்ற சம்பவம் முற்றிலும் செயற்கையான மற்றும் போலியான கதை ஆகும்.

எனவே எகிப்தின் ஓர் அறிஞரான முஹம்மது ரஸா, சீரத் உமர் ஃபாரூக் என்ற தமது நூலில் இந்த சம்பவத்தை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகின்றார்:

இஸ்கந்தரியாவில் தீமூட்டியதாக செய்யப்படுகின்ற ஆட்சேபனை உள்ளது. அபுல் ஃபரஜ் மலத்தி என்பவர் இதனைக் கூறியுள்ளார். அவர் இந்த சம்பவத்தை வரலாற்று புத்தகமான முஹ்தஸிருத் துவல் என்பதில் குறிப்பிட்டுள்ளார். இந்த வரலாற்று ஆசிரியர் 1226 இல் பிறந்தார். 1286 இல் மரணித்து விட்டார். அவர் இவ்வாறு எழுதியுள்ளார்: வெற்றியின்போது யோஹன்னா அன்நஹ்வி என்ற பெயர் கொண்ட ஒரு நபர் இருந்தார். அவர் கிப்தி பாதிரியாக இருந்தார். முஸ்லிம்களுக்கு மத்தியில் யஹ்யா என்ற பெயரால் பிரபல்யம் அடைந்திருந்தார். கொள்கை அடிப்படையில் யாகூபியா என்ற கிறித்துவர்களின் பிரிவுடன் தொடர்புடையவராக இருந்தார். பின் நாட்களில் கிறிஸ்தவர்களின் முத்தெய்வக் கொள்கையிலிருந்து அவர் விலகி விட்டார். அவர் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் கருவூலத்திலிருந்து ஞானத்தின் புத்தகங்களை வேண்டினார். அப்போது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அனுமதி பெற்ற பிறகே என்னால் எதுவும் கூற முடியும் என்று பதிலளித்தார். இது ஒரு வகையில் சிறிய கதையாகும். எனினும் ஆட்சேபனையை மறுப்பதற்காக இதனை கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுதினார்கள்: நீங்கள் எந்த புத்தகங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்களோ அதன் கட்டுரை அல்லாஹ்வின் வேதத்திற்கு ஏற்புடையதென்றால் பின்னர் அல்லாஹ்வின் வேதத்திலுள்ளவை நமக்கு போதுமானதாகும். மேலும் நமக்கு இந்த புத்தகங்களின் எந்த அவசியமும் இல்லை. ஒருவேளை அல்லாஹ்வின் வேதத்திற்கு எதிரானதாக இந்தப் புத்தகத்தின் கட்டுரை உள்ளதென்றால் பின்னர் அந்நிலையிலும் இந்த புத்தகங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. எனவே நீங்கள் இதுபோன்ற புத்தகங்களை அகற்றி விடுங்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அலமாரிகளில் இந்தப் புத்தகங்களை தேடத் தொடங்கி விட்டார்கள். அவற்றை உலைகளில் எரித்து விட்டார்கள். இவ்வாறு அந்த புத்தகங்கள் 6 மாதங்களில் முடிந்து விட்டன.

இந்த அறிவிப்பின் குறிப்பு தப்ரி வரலாற்றிலும் இல்லை. இப்னீ அஸீரிலும் இல்லை. யாகூபிகளின் புத்தகத்திலும் இல்லை. இப்னு அப்தில் ஹகம் மற்றும் பலாதரியிலும் இடம் பெறவில்லை. அதேபோன்று இப்னி கல்தூன் நூலிலும் இதன் குறிப்பு இடம் பெறவில்லை. அபுல் ஃபரஜ் அவர்கள் கிறிஸ்துவத்தின் 13 வது நூற்றாண்டின் பாதியில் மற்றும் ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டின் மத்தியில் எந்தவொரு தோற்றுனரையும் குறிப்பிடாமல் இதனை எழுதியுள்ளார். பேராசிரியர் பட்லர் யோஹன்னா நஹ்லியைக் குறித்து ஆராய்ச்சி செய்தார். பின்னர் இவ்வாறு எழுதியுள்ளார். அதாவது 642 ஆம் ஆண்டில் நூலகம் எரிக்கப்பட்டதற்கான குறிப்பு இடம் பெற்றுள்ளது. அந்தக் காலத்தில் அவர் உயிருடனேயே இல்லை. பிரித்தானியாவின் மஃரூப் என்ற அமைப்பு இவ்வாறு கூறுகின்றது. யோஹன்னா ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலும், 6 ஆம் நூற்றாண்டின் மத்தியிலும் உயிருடன் இருந்தார். மேலும் எகிப்து 7 ஆம் நூற்றாண்டிற்கு மத்தியில் வெற்றி கொள்ளப்பட்டது என்பதையும் அவர் அறிந்திருந்தார். இதன் அடிப்படையில் பட்லர் பேராசிரியர் அவர் மரணித்து விட்டதாக சரியாக கூறினார். அதாவது எதன் அடிப்படையில் அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்களோ அது நிச்சயமாக தவறான அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாகவே அவர் மரணித்திருந்தார்.

அடுத்து டாக்டர் ஹஸன் இப்ராஹீம் ஹஸன் அவர்கள் இஸ்மாயீல் சிந்த் பேராசிரியர் தமது பத்திரிகையில் தாரீகே அம்ர் பின் ஆஸ் (ரலி) என்ற தலைப்பில் இவ்வாறு எழுதியுள்ளார். இஸ்கந்தரியாவின் நூலகம் அப்போது இருந்திருக்கவில்லை. ஏனென்றால் அதன் இரண்டு பகுதிகளில் ஒரு பகுதி அதாவது யூலூஸ் கைஸர் ஸீஸர் படை எந்த சிந்தனையும், காரணமுமின்றி அதை எரித்து விட்டது. அவர் 47 ஆம் ஆண்டில் நாடு கடத்தப்பட்டார். அவர் மற்றொரு வகையும் கூட இவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் மறைந்து விட்டது. இந்த சம்பவம் தியோஃபில் பாதிரியின் கட்டளையின் பேரில் 4 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது.

பேராசிரியர் பட்லர் இவ்வாறு எழுதுகின்றார். அபுல்ஃபரஜின் சம்பவம் வரலாற்றின் பக்கங்களில் முற்றிலும் தொடர்பற்றதாகவும், மேலும் எள்ளிநகையாடக் கூடியதாகும். புத்தகங்களை அவர்கள் எரித்திருந்தார்கள் என்றால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு முறை மட்டுமே எரித்திருக்க முடியும். மேலும் 6 மாதம் வரை அது எரிந்தது என்றால் பின்னர் அவற்றில் ஏராளமானவை திருடு போயிருக்கக்கூடும். அரேபியர்கள் எந்த ஒரு பொருளையும் அழித்ததாக தெரியவில்லை.

கிபன் இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது இஸ்லாமிய போதனைகள் இந்த அறிவிப்பிற்கு எதிரானதாக உள்ளன. ஏனென்றால் போரில் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கிடைத்த வேதத்தை எரிப்பது ஆகுமானதல்ல என்பது அதன் போதனை ஆகும். கல்வி, தத்துவம், கவிஞர்கள் மற்றும் மார்க்கத்துடன் தொடர்புடைய ஏனைய புத்தகங்களும் உள்ளன. எனவே இஸ்லாம் அவற்றிலிருந்து பயன் பெற விரும்பியிருந்தது. வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் தேவாலயங்கள் மற்றும் அதனுடன்

தொடர்புடைய பொருட்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு தடை செய்தார்கள். மேலும் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு மார்க்க ரீதியிலான அமைப்பிற்கு அனுமதியும் வழங்கி இருந்தார்கள். அவ்வாறிருக்க அமீருல் மூமினின் (ரலி) அவர்கள் இஸ்கந்தரியாவின் நூலகத்தை எரிப்பதற்கு கட்டளை வழங்குவார்கள் என்பதை அறிவு ஏற்றுக் கொள்கின்றதா?

(முஹம்மது ரிஸா அவர்கள் எழுதிய சீரத் உமர் ஃபாரூக் என்ற நூல் பக்கம் 294 – 297 – 2010 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவை உண்மைப்படுத்துதல் என்ற தமது நூலில் இந்த ஆட்சேபனையை குறிப்பிட்டு பதில் வழங்கியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஃபைலூனஸ் ஹகிம் மற்றும் ஃபாஸில் அஜல் ஆகியோரின் விண்ணப்பம் தொடர்பாக படைத்தளபதி அம்ர் அவர்கள் இந்த நூலகத்தை குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வழிகாட்டல் வேண்டினார்கள். அப்போது உடனடியாக அதை எரித்து விடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டளை வழங்கினார்கள். 6 மாதம் வரை தொடர்ந்து அந்தப் பகுதி எரிந்து கொண்டிருந்தது.

அன்னார் எழுதுகின்றார்கள்: அந்த மக்கள் இவ்வாறெல்லாம் கூறுகின்றார்கள். இந்த ஆட்சேபனை என்பது பாதிரிமார்களின் ஒரு கண்மூடித்தனமான ஆட்சேபனை ஆகும். இதில் எந்த உண்மையும் இல்லை. வாசகர்கள் சீர்தூக்கிப் பாருங்கள்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: முதலாவது விஷயம் என்னவென்றால், இது இஸ்லாத்தின் நடைமுறையாக இருந்திருந்தால் பின்னர் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தமது பதவிக் காலத்தில் மஹத் நகரத்திலிருந்த யூத மற்றும் கிறிஸ்துவர்களின் தூய புத்தகங்களை எரித்திருப்பார்கள். ஏனென்றால் அதே இரண்டு மார்க்கங்கள் மற்றும் அந்த வேதத்தை ஏற்றுக் கொண்டவர்களுடன் தான் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முன்னர் உரையாடப்பட்டிருந்தது. அடுத்து நெருப்பை வணங்கக் கூடியவர்களின் மீது இஸ்லாம் முழுமையாக மேலோங்கியது. ஆயினும் இஸ்லாம் அவர்களின் வேதங்களை எரித்ததாக எந்த வரலாறும் கூறவில்லை. ஒருவேளை இந்த செயல் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய கலீஃபாக்களின் நடைமுறையாக இருந்தால் அதாவது அவர்களின் பழக்கமாக இருந்திருந்தால் பின்னர் அதற்கான காரணிகள் எப்போதும் இஸ்லாத்தில் இருந்திருக்கும். இஸ்லாத்திற்கு அதில் எந்த விஷயமும் தடையாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டாவது விஷயம் என்னவென்றால், மார்க்க நூல்களை எரிப்பது இஸ்லாமிய ஆட்சியாளர்கள், பொதுமக்களின் பணியாக இருக்குமென்றால், பின்னர் யுனானியத் தத்துவம் மற்றும் யுனானி மருத்துவத்தின் மொழியாக்கத்தை கொண்ட அரபி நூல்கள் இருப்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

மூன்றாவதாக, பராஹீனே அஹ்மதிய்யாவைப் பொய்ப்படுத்துகின்ற மற்றும் ஏளனம் செய்கின்றவருக்கு பதிலாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஸ் அவர்கள் இதனை எழுதுகின்றார்கள். இஸ்லாமிய மக்கள் இந்த நூலை எரித்திருந்தார்கள் என்றால் பின்னர் தமது நாட்டில் ஏதாவது அதற்கு இணையான சம்பவத்தை கொண்டு வந்திருப்பார்கள். அவர்கள் இஸ்கந்தரியாவில் கடல் கடந்து செல்வதற்கு சூழல் உருவாகி இருக்காது. இங்கு இந்தியாவில் எந்த புத்தகங்கள் எரிக்கப்பட்டன? என்றும் எழுதியுள்ளார்கள்.

நான்காவதாக, 700 ஆண்டுகளுக்கும் அதிகமாக இஸ்லாம் இந்தியாவில் ஆட்சி செய்தது. இந்த காலத்தில் பகவத் கீதை, இராமாயனம், கீதா, மகாபாரதம் மற்றும் அதற்கு இணையான லிங்க புராணம், மார்குன்டி போன்ற பிரபலமான புத்தகங்கள் இருக்கின்றன. இன்று வரை மார்க்க புத்தகங்கள் என்றும் புனித வேதம் என்றும் அவற்றின் மீது நம்பிக்கை கொள்ளப்படுகிறது. ஒருவர் அதனை எரித்து விட்டார் என்ற செய்தி காதுகளை வந்தடையவில்லை. மாறாக, இந்த நூல்களில் சிலவற்றிற்கான மொழியாக்கமும் நடந்துள்ளது. எனவே ஆச்சரியம் என்னவென்றால் முஸ்லிம்கள் அவர்களின் நூலகத்தை எரிக்கின்றார்கள் என்று இந்துக்கள் எவ்வாறு புரிந்து கொண்டனர்? நீதியுடன் சிந்தித்து பாருங்கள்.

(தஸ்தீக், பராஹீனே அஹ்மதிய்யா, தொகுதி 1 பக்கம் 203, 204)

இந்த ஆட்சேபனைக்கு பதிலாக தஸ்தீக் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலில் ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் இந்த குறிப்பையும் எழுதியுள்ளார்கள். அன்னார் எழுதுகின்றார்கள்: இந்த சம்பவம் ஆராய்ச்சி செய்யப்படாத வரை உண்மையான நிலவரம் வெளியில் தெரியாமல் இருந்தது. முஸ்லிம்கள் மீது இவர்கள் பழி சுமத்துகின்றனர். ஆனால் தற்போது நீதி நெறி இயல்பைக் கொண்ட உண்மையை விரும்புகின்ற அறிஞர்கள் மிகக் குறைவான மக்களே உள்ளனர். அவர்கள் உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுகளை முஸ்லிம்கள் மீது சுமத்துவது கிடையாது. இந்தக் குற்றச்சாட்டிற்கு காரணம் பெரும்பாலும் காழ்ப்புணர்ச்சி அல்லது அறியாமையின் விளைவாகும். இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அந்த நேரத்தில் எந்த சரியான சான்றுகளும் இல்லாமல் இருந்தது. அதாவது இந்தக் கதையை எடுத்துரைக்கக்கூடிய இரண்டு வரலாற்று ஆசிரியர்கள் இந்த சம்பவத்திலிருந்து 580 ஆண்டுகளுக்கு பிறகு பிறந்துள்ளனர். முந்தைய எந்த சான்றும் அவர்களிடம் இருந்திக்கவில்லை.

Saint Croix என்பவர் இஸ்கந்தரியா நூலகத்தின் ஆராய்ச்சி தொடர்பாக ஏராளமான புத்தகங்களை எழுதியுள்ளார். இந்த அறிவிப்பை அது முற்றிலும் பொய்யானதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நூல்கள் Julius Caesar போரின்போது எரிக்கப்பட்டு விட்டன என்று தெரிய வருகின்றது. எனவே Plutarch அவர்களும் லைஃப் ஆஃப் சீசர் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்: Julius Caesar எதிரிகளின் கைகளில் சிக்கி விடுவோம் என்ற அச்சத்தால் தமது கப்பல்களுக்கு நெருப்பூட்டி விட்டார். அதே நெருப்பு பரவி பரவி இந்த அளவிற்கு சென்றடைந்து. அதாவது அது இஸ்கந்தரியாவின் பிரபலமான மகத்துவமிக்க நூலகத்தை முற்றிலும் எரித்து விட்டது.

ஹைடன் என்பவர் தமது Dictionary of Dates Relating to all Ages என்ற நூலில் அந்த தவறான அறிவிப்பை பதிந்துள்ளார். அங்கு தனது ஆராய்ச்சிகளிலிருந்து இந்த குறிப்பையும் எழுதியுள்ளார். அதாவது இந்தக் கதை முற்றிலும் சந்தேகத்திற்குரியதாகும் என்று எழுதியுள்ளார். அந்தப் புத்தகங்கள் இஸ்லாத்திற்கு எதிரானவை என்றால் அது எரிக்கப்பட்டு விட வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியதாக குறிப்பிடும் அறிவிப்பை முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இந்த கூற்றை சிலர் Theophilus இஸ்கந்தரியாவின் பிஷப் கூறியதாக சுட்டிக் காட்டுகின்றனர். 391 ஆம் ஆண்டு தோன்றினார். சிலர் அவரை Cardinal Jimenez என்று அழைத்து வந்தார்கள். அவர் 1500 ஆண்டில் இருந்தார்.

தொடர்ந்து எழுதுகின்றார்: நமது மிகவும் பிரபலமான இளைஞர் Dr. Leitner தீனுல் இஸ்லாம் என்ற தமது நூலில் இந்த தவறான கருத்தை குறிப்பிட்டுள்ளார். ஆனால் மிக வேதனையுடன் தெரிய வருவது என்னவென்றால், அந்த டாக்டர் சாஹிப் அவர்களுக்கு தமது ஆய்வில் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

டர்பீர் சாஹிப் John William Draper ஆகியோர் பிரபலமான நூலில் முதலில் இந்தக் கூற்றை தவறான அறிவிப்புகளுடன் பதிவிட்டுள்ளனர். ஆனால் பிற்காலத்தில் இந்த கூற்றில் உள்ள தவறை ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் இவ்வாறு எழுதியுள்ளனர்: உண்மையில் இந்த நூல்கள் Julia சீஸர் போரில் எரிக்கப்பட்டு விட்டன. மேலும் இந்தக் கூற்று முற்றிலும் அடிப்படையற்றது மற்றும் வெறும் கற்பனையாகும் என்பதை தற்போது தம்மால் முழுமையான நம்பிக்கையுடன் கூற முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே இது உண்மையான சம்பவமாகும். இந்த விஷயத்தின் மீது வேதனைப்பட வேண்டும். அழ வேண்டும். இது உண்மையான சம்பவமாகும். காழ்ப்புணர்ச்சி கொண்ட கார்டினல் 80 ஆயிரம் அரபி நூல்களை கராண்டா மைதானத்தில் அழித்து விடக்கூடிய நெருப்பின் ஜூவாலைகளிடம் ஒப்படைந்திருந்தார். முஸ்லிம்களிடமிருந்து அவர்கள் ஸ்பெயினை பறித்தபோது மற்றும் கிறிஸ்துவர்கள் அதனை ஆக்கிரமித்துக் கொண்டபோது அங்கு நூலகத்திலிருந்த 80 ஆயிரம் நூல்களை அவர்கள் எரித்து விட்டனர். இதுவே அழுவதற்குரிய அசல் இடமாகும். ஆனால் இவர்கள் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றார்கள். Conflict Between Religion and Science.

(தஸ்தீக் பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 1 பக்கம் 203 அடிக்குறிப்பு)

இதில் இந்த ஆதாரம் பதியப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் நூலகத்தை எரிக்கக்கூடிய ஆதாரம் இடம் பெற்றுள்ளது. ஆனால் அது குறித்து முஸ்லிம்கள் மீது பழி சுமத்தப்படுகிறது.

அடுத்து பர்கா, தராபல்ஸ் போன்ற இடங்களின் வெற்றிகள் குறித்த குறிப்புகள் உள்ளன. எகிப்தை வெற்றி கொண்ட பிறகும் அங்கு அமைதி நிலைநாட்டப்பட்ட பிறகும் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மேற்கு நோக்கி முன்னேறினார்கள். ஏனென்றால் அந்தப் பக்கத்திலிருந்து வெற்றி கொள்ளப்பட்ட இடங்களுக்கு எந்த ஆபத்தும் எஞ்சியிருக்கக்கூடாது என்று அன்னார் எண்ணினார்கள். ஏனென்றால் பர்கா மற்றும் தராபல்ஸில் ரோமானியர்களின் சில படை கோட்டைக்குள் அடைபட்டிருந்தது. சந்தர்ப்பம்

கிடைக்கும்போது மக்களை கிளர்ந்தெழச் செய்து எகிப்தில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த முடிந்திருந்தது. இஸ்கந்தரியா மற்றும் மராகஸிற்கு மத்தியில் அமைந்த பகுதியை பர்கா என்று கூறுவார்கள். இந்தப் பகுதியில் பல நகரங்கள் மற்றும் ஊர்களின் குடியேற்றம் அமைந்துள்ளன. எனவே அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டில் தனது படையை அழைத்துக் கொண்டு பர்காவை நோக்கி சென்றார்கள். இஸ்கந்தரியாவிலிருந்து பர்கா வரையிலான பாதை மிகவும் பசுமையானதாகவும், மிகுதியான மக்கள் தொகையாலும் நிறைந்திருந்தது. எனவே அங்கு வரை சென்றடைவதில் எதிரியின் எந்தவொரு சதித்திட்டத்தையும் அன்னாருக்கு எதிர்கொள்ள நேரிடவில்லை. அங்கு சென்றடைந்தபோது மக்கள் ஜிஸ்யா வரி செலுத்துவதாக கூறி சமாதானம் செய்து கொண்டார்கள். அதன் பிறகு பர்கா நகர மக்கள் சுயமே எகிப்தின் ஆளுநரிடம் சென்றார்கள். தனது ஹராஜ் வரியை செலுத்தி வந்தார்கள். முஸ்லிம்கள் புறமிருந்து அவர்களிடம் செல்வதற்கு எவருக்கும் அவசியம் ஏற்படவில்லை. இந்த மக்கள் மேற்குப் பகுதியில் மிக அதிகமான எளிய மக்களாக இருந்தனர். அவர்களிடத்தில் எவ்வித குழப்பமும், சச்சரவும் இருந்திருக்கவில்லை.

அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் இங்கிருந்து புறப்பட்டு தராபல்ஸ் என்ற இடத்தை நோக்கி சென்றார்கள். அது மிகவும் பாதுகாப்பானதாகவும், வலிமை வாய்ந்த கோட்டைகளைக் கொண்ட நகரமாகவும் இருந்தது. அங்கு ரோமானிய படை மாபெரும் எண்ணிக்கையில் தங்கியிருந்தது. முஸ்லிம்களின் வருகையின் செய்தியை அறிந்து தமது கோட்டைகளின் வாசல்களை அவர்கள் அடைத்துக் கொண்டனர். வேறு வழியின்றி முஸ்லிம்களின் முற்றுகையை சகித்துக் கொண்டார்கள். இந்த முற்றுகை ஒரு மாதம் வரை நீடித்திருந்தது. ஆனால் முஸ்லிம்களுக்கு எந்தவொரு வெற்றியும் கிடைத்திருக்கவில்லை. தராபல்ஸை தொடர்ந்து நகரத்தை ஒட்டி கடல் அமைந்திருந்தது. கடல் மற்றும் நகரத்திற்கு மத்தியில் எந்தவொரு கோட்டையும் அமைந்திருக்கவில்லை. முஸ்லிம்களின் ஒரு கூட்டத்திற்கு இந்த இரகசியம் தெரிய வந்தது. பின்புறமிருந்து கடலை நோக்கி நகரத்திற்குள் நுழைந்து விட்டார்கள். மிக சப்தத்துடன் தக்பீர் முழக்கமிட்டார்கள். தற்போது தத்தமது படகுகளில் அமர்ந்து தப்பியோடி அடைக்கலம் தேடுவதைத் தவிர்த்து வேறு எந்தவொரு வழியும் படைக்கு முன் எஞ்சியிருக்கவில்லை. அவர்கள் ஓடியபோது பின்னாலிருந்து அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் தாக்குதல் தொடுத்து விட்டார்கள். அவர்களில் பெரும்பாலோர் கொலை செய்யப்பட்டார்கள். படகுகளில் அமர்ந்து தப்பியோடியவர்களைத் தவிர மீதமிருந்த அனைவரின் கதையும் முடிக்கப்பட்டது. நகரத்திலிருந்த பொருட்களையும், சொத்துக்களையும் முஸ்லிம்கள் போர் செல்வங்களாக பெற்றுக் கொண்டனர்.

தராபல்ஸை எதிர்கொண்ட பிறகு அம்ர் பின் ஆஸ் அவர்கள் தமது படையை அக்கம் பக்கத்திலிருந்த பகுதிகளில் பரப்பி விட்டார்கள். மேற்கு பக்கத்தில் வெற்றிகளை முழுமை செய்து விட்டு தியோனஸ் மற்றும் ஆஃப்ரிக்காவின் பக்கம் செல்ல வேண்டுமென்பது அன்னாரின் எண்ணமாக இருந்தது. எனவே இது தொடர்பாக ஸய்யிதுனா ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய படையை புதிய போருக்கு அனுப்புவதற்கு தயங்கினார்கள். குறிப்பாக சிரியாவிலிருந்து தராபல்ஸ் வரை விரைவாக கிடைத்த வெற்றியின் காரணமாக வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் தற்போது முழுமையாக திருப்தி கொள்ள முடியாமல் இருந்தது. எனவே இந்த நிலையில் அவர்கள் தயங்கினார்கள். அதன் காரணமாக அன்னார் இஸ்லாமிய படையை தராபல்ஸில் தங்கியிருக்கும்படி கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் இஸ்லாமிய பேரரசின் வட்டம் தொலைதூர பகுதிகளின் எல்லைகளை தொடத் துவங்கியது. இஸ்லாமிய பேரரசு கிழக்கில் கிஹோன் நதி மற்றும் சிந்து நதி வரையிலும் மேற்கில் ஆஃப்ரிக்காவின் சஹாரா பாலைவனம் வரையிலும், வடக்கில் அனடோலியன் மலைகள் மற்றும் ஆர்மீனியா வரையிலும் தெற்கே பசிபிக் பெருங்கடல் மற்றும் நுபியா வரையிலும் ஓர் உலகளாவிய நாடு என்ற வடிவில் உலக வரைபடத்தில் இடம் பெற்றிருந்தது. நுபியா என்பது எகிப்தின் தெற்குப் பகுதியாகும். அது மிகவும் பரந்து விரிந்த பகுதியாகும். அதில் பல்வேறு மார்க்கங்களையும், நாகரீகங்களையும் சார்ந்த சமுதாயங்கள் வாழ்ந்து வந்தன.

அதாவது இஸ்லாமிய அரசாங்கம் எகிப்து பகுதியில் மட்டுமில்லை. மாறாக, இந்த முழு பகுதியும் முஸ்லிம்களின் தாக்கத்தின் கீழ் இருந்தது. அங்கு பல்வேறு சமுதாயங்களும் இருந்தன. பல்வேறு நாகரீகங்களும் இருந்தன. அவர்கள் அனைவரும் இஸ்லாத்தின் நீதி மற்றும் கருணையின் நிழலில் அமைதி மற்றும் பாதுகாப்பு நிறைந்த வாழ்க்கையை கழித்தனர். தனது கொள்கை, இறைவணக்கங்கள், நாகரீகம் ஆகியவற்றின் எதிரிகளின் ஆயிரக்கணக்கான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இந்த உலகில் அவர்களுக்குரிய முழுமையான உரிமைகளை இஸ்லாம் வழங்கியுள்ளது. அத்தகைய இஸ்லாம் அந்த மக்கள் அனைவரின் வாழ்க்கையை முழுமையாக மதித்தது.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் (ரலி) சக்ஷியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 765, 767 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 462 பர்கா – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 5 பக்கம் 357 நூபா – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

போர்களுக்கு மத்தியில் முஸ்லிம்களின் இறைவணக்கங்களின் தரம் எவ்வாறிருந்தது? இதைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உலகில் ஒவ்வொரு விஷயமும் படிப்படியாக முன்னேற்றம் அடைகின்றது. பெரும் பெரும் பணிகளும் கூட உடனடியாக நடந்து விடுவது கிடையாது. மாறாக, மெது மெதுவாக நிகழ்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அனைத்து முஸ்லிம்களும் தஹஜ்ஜுத் தொழுதிருக்கவில்லை. மெது மெதுவாக அவர்களுக்கு அந்த பழக்கம் ஏற்படுத்தப்பட்டு வந்தது. எந்த அளவுக்கென்றால் ஒரு காலம் வந்தது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் போர்களின் நாட்களிலும் முஸ்லிம்கள் தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட சில முறை கைவிட்டுள்ளார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் போர்களின் நாட்களில் தஹஜ்ஜுத் தொழுவதற்காக எழுந்து வந்தது சாத்தியமாகும். ஆனால் சில முறை எழுந்திருக்கவும் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் முஸ்லிம்கள் போரின் நாட்களிலும் தஹஜ்ஜுத் தொழுது வந்துள்ளார்கள். எந்த அளவுக்கென்றால் ஒரு முறை ஹிர்குல் அவர்கள் மீது இரவில் தாக்குதல் தொடுப்பதற்கு எண்ணம் கொண்டிருந்தான். அப்போது அது குறித்து விவாதம் நடந்தது. இறுதியில் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஏனென்றால் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவது வீணானதாகும். காரணம் அவர்கள் இரவில் தூங்குவதே கிடையாது. மாறாக, அவர்கள் தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருப்பார்கள். இதுவும் வெற்றியின் அடையாளமாகும். ஆரம்ப நாட்களில் இந்த நிலை இருந்திருக்கவில்லை. துவக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இதற்காக அதிக கவனமூட்டுவதற்கான அவசியம் ஏற்பட்டு வந்தது. ஆனால் பிற்காலத்தில் மெதுமெதுவாக பலவீனமானவரும் கூட இதற்கு பழக்கமுடையவராக ஆகிவிட்டார்.


(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 13 பக்கம் 189)

ராஷிதீன் கலீஃபாக்களின் காலத்தில் நடைபெற்ற போர்களைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாம் போருக்கான கட்டளை மட்டும் வழங்கவில்லை. மாறாக, சில சூழ்நிலைகளில் அநீதிகளை சகித்துக் கொள்வதற்கும் வழிகாட்டியுள்ளது. எனவே உங்களை ஒருவர் அறைந்தால் நீங்களும் அவரை அறையுங்கள் என்று எங்கு அல்லாஹ்வின் புறமிருந்து அனுமதி உள்ளதோ அங்கு அவன் இதனையும் நமக்கு கூறியுள்ளான். நீங்கள் எதிர்ப்பதை நன்மைக்கு எதிரானதாக கருதினால் பின்னர் நீங்கள் அமைதியாக இருங்கள். கன்னத்தில் அறைந்ததற்கு திருப்பி கன்னத்தில் அறைந்து பதில் கொடுக்காதீர்கள். எனவே பொதுவாக இந்தப் போர்களைக் குறித்து எடுத்துரைக்கப்படுகின்ற ஆதாரங்களிலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர் மீது எதிரிகளின் ஆட்சேபனைக்கு பதிலாக அமைந்து விடுகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அநீதியிழைக்கவில்லை. மாறாக, கைஸர் தான் அநீதியிழைத்தான் என்பது தெரிகிறது. அதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அநீதியிழைக்கவில்லை. கிஸ்ரா தான் அநீதியிழைத்தான். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அநீதியிழைக்கவில்லை. மாறாக, ஆப்கானிஸ்தான் மற்றும் புகாராவின் எல்லையில் வசிக்கக்கூடிய கோத்திரங்களே அநீதியிழைத்தன என்று தெரிகிறது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களை ஏன் மன்னிக்கவில்லை என்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த மக்களை ஏன் மன்னிக்கவில்லை? ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த மக்களை ஏன் மன்னிக்கவில்லை? என்பதற்கும் சான்று கிடைக்கவில்லை. அவர்கள் போருக்காக புறப்பட்டபோது கைஸரிடம் இவ்வாறு கூறியிருக்க முடியும். உமது படைத் தளபதியிடம் இந்த தவறு ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக நீங்கள் எங்களிடம் மன்னிப்பு வேண்டினால் நாங்கள் மன்னித்து விடுவோம். நீங்கள் மன்னிப்பு கேட்கவில்லையென்றால் நாங்கள் போரிடுவோம் என்று கூறியிருக்க முடியும். உம் புறமிருந்து அல்லது உமது படையின் சார்பாக இன்ன சந்தர்ப்பத்தில் அநீதி நிகழ்ந்தது. எங்களது போதனை என்னவெபன்றால் எதிரியை மன்னித்து விடுங்கள் என்பதாகும். எனவே நீங்கள் மன்னிப்பு கேட்டால் நாங்கள் மன்னிப்பதற்கு தயாராக இருக்கின்றோம் என்று கைஸருக்கு முன்னால் இந்த விஷயத்தை அன்னார் எடுத்து வைக்கவில்லை. மாறாக, அவன் அநீதியிழைத்தபோது முஸ்லிம்கள் உடனடியாக அவர்களை எதிர்ப்பதற்கு (போரிடுவற்கு) எழுந்து விட்டார்கள். பின்னர் அந்தப் போரை தொடர்ந்தார்கள். கிஸ்ராவின் போர் வீரர்கள் ஈராக்கின் எல்லையின் மீது தாக்குதல் தொடுத்தபோது அரசியல் ரீதியில் அதன் பிறகு சஹாபிகள் மற்றும் கிஸ்ராவுக்கு மத்தியில் போர் நிகழ்ந்தது முற்றிலும் ஆகுமானதாக ஆகிவிட்டது. ஆனால் ஒழுக்க ரீதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிஸ்ராவிற்கு இவ்வாறு கூறியிருக்க முடியும். அதாவது நீங்கள் ஒருவேளை இந்த தாக்குதலுக்கான கட்டளை வழங்காமல் இருந்திருக்கலாம். மாறாக, சிப்பாய்கள் சுயமே தாக்குதல் தொடுத்திருக்கலாம். எனவே இந்த தாக்குதலை நாங்கள் பொருட்படுத்தாமல் இருப்பதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால் நிபந்தனை என்னவென்றால், நீங்கள் மன்னிப்பு கேட்க வேண்டும். மேலும் இந்த செயலிற்கு எங்களிடம் வருத்தத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

அதேபோன்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் எதிரிகளிடம் இவ்வாறு கூறவில்லை. நீங்கள் அநீதியிழைத்து விட்டீர்கள். எங்களது மார்க்கம் மன்னிப்பதற்கான போதனையை வழங்குகின்றது. எனவே நாங்கள் உங்களை மன்னிக்கின்றோம் என்றெல்லாம் கூறவில்லை. மாறாக, அவர்கள் உடனடியாக இந்த அநீதிக்கு எதிராக போரிடுவதற்கு எழுந்து நின்று விட்டார்கள். படையை அனுப்பினார்கள். சண்டையிட்டார்கள். பின்னர் அந்தப் போரை தொடர்ந்தார்கள். இறுதியில் இதற்கு என்ன காரணமாக இருந்தது?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் சீர்தூக்கிப் பார்த்தால் நமக்கு இந்த விஷயம் தெரிய வரும். இதைத் தவிர்த்து அதற்கு வேறு எந்த காரணமும் இருக்காது. அதாவது வெளிப்புறத்தில் அபாயம் குறைந்து உள்ளார்ந்த குழப்பங்கள் தொடங்கிவிடும் என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். கைஸர் தாக்குதல் நடத்தவில்லை. மாறாக, இறைவன் தாக்குதல் நடத்தியுள்ளான் என்பதை அவர்கள் புரிந்திருந்தார்கள். ஏனென்றால் முஸ்லிம்கள் இந்த துன்பத்தின் மூலம் தனது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் தன்னுள் புதிய வாழ்க்கை மற்றும் புதிய மாற்றத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கிஸ்ரா தாக்குதல் நடத்தவில்லை. மாறாக, இறைவன் தாக்குதல் நடத்தியுள்ளான். ஏனென்றால் முஸ்லிம்கள் கவனமற்றவர்களாகவும், சோம்பேறிகளாகவும் இருந்து உலகில் வீணாகி விடக்கூடாது என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். மாறாக, எப்போதும் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையாகவும் முஸ்லிம்கள் இருக்க வேண்டும். சில கோத்திரங்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை. மாறாக, முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்களிடத்தில் ஒரு புதிய ஆன்மா மற்றும் ஒரு புதிய வாழ்க்கை உருவாக வேண்டும் என்பதற்காக இறைவன் தாக்குதல் நடத்தியுள்ளான் என்பதை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 30 பக்கம் 175,176)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது ஒரு குத்பாவில் இதனை எடுத்துரைத்திருந்தார்கள். இதன் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அடுத்து இந்த அறிவிப்பையும் அதில் செய்திருந்தார்கள். ஜமாஅத்திற்கு இவ்வாறு அறிவுரை செய்தார்கள். துன்பங்கள் வந்து விடக்கூடும். ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காக கஷ்டங்களை கடக்க வேண்டும். இந்த விதிமுறையை நாம் இன்றும் நினைவில் வைக்க விரும்பினால் பின்னர் இந்த துன்பங்களும், கஷ்டங்களும் நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருங்கக்கூடியவர்களாக ஆக்கி விட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மேலும் இதுவே வெற்றிகளுக்கான வழிமுறையாக ஆகி விடுகின்றன. ஒருவேளை இந்த விஷயங்களிலிருந்து நாம் அஞ்சிக் கொண்டு பின்தங்கி இருந்தால் மேலும் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் பின்னர் முன்னேற்றம் ஏற்பட முடியாது. ஆயினும் வெற்றிகள் கிடைத்து விடும்போதும், துன்பங்கள் முடிந்து விடும்போதும் நமக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்க வேண்டும். எனவே இந்த நாட்களில் குறிப்பாக அல்லாஹ்வின் பக்கம் அதிக கவனம் இருக்க வேண்டும். ஆன்மீக முன்னேற்றம் மற்றும் ஆன்மீக மேன்மையின் பக்கம் நமது கவனம் இருக்க வேண்டும். நாம் இந்த விஷயத்தை புரியவில்லையென்றால் எதையும் புரியவில்லை என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த விஷயம் இன்றும் புரிய வேண்டியதாக உள்ளது.

(தமிழாக்கம்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நோக்கம் நிறைவேறுவதாக இந்த உலகில் தென்படுவதில்லை. எனவே மனித வாழ்க்கை இந்த உலகத்துடன் முடிவடையாமல் இருப்பது அவசியமாகும். மாறாக இந்த அமைப்பின் மகத்துவத்திற்கேற்ப ஒரு நீண்ட காலம் வரை செல்ல வேண்டும். அதில் இந்த அமைப்பின் மேன்மைக்கேற்ப உயர்தரமான அந்தஸ்தை அவர் பெற்றுக் கொள்ள வேண்டும். சீர்தூக்கிப் பார்த்தால் முழு அமைப்பு என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அல்லாஹ் சிறிதிலும் சிறிய விஷயத்திலும் கூட எப்படிப்பட்ட இரகசியங்களை வைத்துள்ளான் என்றால் அது முடிவிற்கே வருவதில்லை. மனித உடலையே எடுத்துக் கொள்ளுங்கள். அதன் அமைப்பு எவ்வளவு சிக்கலானதாக உள்ளது. ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மருத்துவர்களும் அதன் விளக்கத்தை அறிகின்ற வல்லுனர்களும் அதன் உண்மையை அறிந்து கொள்வதில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இதுவரை அந்த விவகாரங்களை அதாவது மனித உடலுடன் தொடர்புடைய அந்த விவகாரங்களை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

திருக்குர்ஆன் இறங்கிய காலத்திற்குப் பிறகு ஐரோப்பா விஞ்ஞானத்தில் மாபெரும் சிறப்பை பெற்றுள்ளது. ஆனால் இதுவரை மனித உடல் தொடர்பாக முழுமையான அறிவை பெற முடியவில்லை.

பின்னர் இந்த அளவிற்கு மகத்துவமிக்க சட்டங்கள் மூலம் மனித அமைப்பிற்கு அடித்தளம் வைக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட படைப்பின் நோக்கத்தை இந்த அளவிற்கு சிறுமைப்படுத்துவதை அதாவது கியாமத்தை மறுப்பவர்கள் கூறுவதுபோன்று சிறுமைப்படுத்தவது எந்த அளவிற்கு அறிவுக்கு ஏற்புடையதாக ஏற்றுக் கொள்ள முடியும். இதேபோன்று இந்த அமைப்பு நபிமார்களின் வெற்றி மற்றும் அவர்களின் எதிரிகளின் அழிவிற்கும் சான்று பகர்கின்றது. வானத்திலிருந்து பூமியை பிரித்து விடுங்கள். பின்னர் அதன் நிலை எவ்வாறிருக்கும்? ஒரு நாள் கூட நிலைநிற்க முடியாது. எனவே ஆன்மீக வானத்துடன் முற்றிலும் தொடர்பை முறித்துக் கொண்டு தப்பித்து விடலாம் என்று எண்ணம் கொள்பவர்கள் எந்த அளவிற்கு குருடர்களாக உள்ளனர்? எவ்வாறு இந்த அமைப்பின் முழுமையான அங்கமாக இருந்து கொண்டு தான் பூமி பாதுகாப்பாக இருக்க முடியுமோ அதேபோன்று ஆன்மீக அமைப்பின் அங்கமாக இருப்பதன் மூலமாகவே மனிதன் அழிவிலிருந்து தப்பிக்க முடியும். இல்லையென்றால் தப்பிப்பதற்கு எந்த வழியும் இல்லை. அதிலும் குறிப்பாக அவன் இந்த அமைப்பின் மீது தாக்குதல் தொடுப்பவனாக இருந்தால் பின்னர் அவனது இரட்சிப்பு என்பது நிச்சயமாக சாத்தியமற்றதாகும். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நிராகரிப்பவர்களைக் குறித்து இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஆன்மீக வானத்துடன் தொடர்பை முறித்துக் கொள்வதன் காரணமாக அவர்களின் பொருட்கள் எந்த வகையிலும் எந்த பணிக்கும் பயன்படாது. மாறாக, தற்போது அவர்களின் அழிவு மற்றும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான நேரம் வந்து விட்டது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 107 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## ஹுஸூர் அவர்களிடம் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகளும், அதற்குரிய பதில்களும்

(பகுதி – 13)

**கேள்வி:** ஒரு பெண்மணி ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் ஒட்டகப் போர் நடந்தற்கான காரணம் மற்றும் அதன் உண்மைத்தவத்தைப் பற்றி கேட்டார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மீது கருணையின்றி கையை உயர்த்தினார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் கரு கலைந்து விட்டதாக சிலர் கூறுகின்றனர். இந்த விஷயங்களில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது? என்று அந்த பெண்மணி கேட்டார்.

**பதில்:** ஹுஸூர் அவர்கள் 21 நவம்பர் 2019 ஆம் ஆண்டு தனது கடிதத்தில் கீழ்க்கண்ட பதிலை வழங்கினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் வீணானதும், உண்மைக்கு எதிரானதும், சம்பவங்களுக்கும், உண்மைத்துவத்திற்கும் முற்றிலும் மாற்றமானதாகும். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு சில மாதம் வரையே உயிருடன் இருந்தார்கள். இந்த காலமும் கூட பெரும்பாலும் நோயின் நிலையிலேயே அவர்களுக்கு கழிந்தது. பின்னர் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொந்த மகளாக இருந்தார்கள். அவர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவ்வாறு இதுபோன்று தவறாக நடந்திருக்க முடியும்? ஹுஸூர் (ஸல்) அவர்களுடன் தொடர்பு வைத்திருந்த அந்நிய மக்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எல்லையற்ற அன்பு வைத்திருந்போது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுடன் எவ்வாறு தவறாக நடந்திருப்பார்கள்? எனவே ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அன்னாரிடம் தாங்கள் உஸாமா பின் ஸைத் அவர்களை விட குறைவாக எனக்கு ஏன் உதவி தொகை வழங்கினீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உஸாமா (ரலி) அவர்கள் உன்னை விட மிகவும் நேசத்திற்குரியவராக இருந்தார். அவரது தந்தை (ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா) உமது தந்தை (ஹஸ்ரத் உமர் (ரலி)) யை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அன்பிற்குரியவராக இருந்தார். எனவே நான் அவருக்கு உன்னை விட அதிகமாக உதவித் தொகை வழங்கினேன். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு அடிமையின் மகனுக்கு தனது சொந்த மகனை விட இந்த அளவிற்கு முக்கியத்துவம் வழங்கக்கூடியவராக இருந்த நபர் மீது, அவர் ஹுஸூர் (ஸல்) அவர்களின் சொந்த பிள்ளையுடன் இவ்வாறு நடந்து கொண்டார் என்று குற்றம் சுமத்துவது எவ்வாறு சரியாக இருக்க முடியும்? இந்த எதிரிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டாகும்.

ஒட்டகப்போரின் உண்மைத்துவம் பற்றிய கேள்வியைப் பொறுத்தவரை அந்தப் போர் முஸ்லிம்களின் இரண்டு தரப்பிற்கு மத்தியில் அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) ஆகியோரின் படைகளுக்கு மத்தியில் நிகழ்ந்தது என்பதில் எந்த ஐயமும் இல்லை. முஸ்லிம்களுக்கு மத்தியில் இதுபோன்ற எந்த ஒரு இரத்தம் சிந்துகின்ற சண்டையும் நிகழ்ந்ததில்லை. மேலும் எராளமான முஸ்லிம்களும், பெரும் பெரும் ஜெனரல்களும், வீரர்களும் அந்தப் போரில் கொல்லப்பட்டனர். ஆனால் இந்த அனைத்து நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்த பிறகு மதீனாவை கைப்பற்றிக் கொண்ட அந்த குழப்பவாதிகள் மற்றும் தீய மக்களின் கையே இருந்தது. அந்த குழப்பவாதிகள் தான் இரண்டு முஸ்லிம் கூட்டத்திற்கு மத்தியில் தவறான புரிதலை உருவாக்கி பல தீமைகளை சுயமே உருவாக்கி போரை மூட்டி விட்டனர். இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அலியின் கிலாஃபத் சம்பவங்கள் என்ற தலைப்பில் மிகவும் நீண்ட நெடிய விவாதம் செய்துள்ளார்கள். அதையும் நீங்கள் படியுங்கள்.

(ஸஹூர் அஹ்மது கான் – முபல்லிக் PS அலுவலக பதிவுத்துறை, இலண்டன். (நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 9 ஏப்ரல் 2021)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

வெளிப்படுத்தவில்லையென்றால் பின்னர் ஒரு வக்ஃபே நவ் மருத்துவர் என்பதற்கு பகரமாக நீங்கள் ஜமாஅத்தை அவப்பெயருக்கு ஆளாக்கக்கூடியவராக இருப்பீர்கள். எனவே எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள். நீங்கள் அங்கு அல்லாஹ்விற்காக படைப்பின சேவையின் உணர்வுடன் செல்கின்றீர்கள். எனவே அல்லாஹ்வையும் திருப்திப்படுத்த வேண்டும். மேலும் மக்களையும் திருப்திப்படுத்த வேண்டும். மேலும் இந்த உணர்வை எப்போதும் நிலைநாட்ட வேண்டும்.

நமது மற்றொரு வக்ஃபே நவ் டாக்டர் அத்ஹர் அஹ்மது சாஹிப் அவர்கள் அன்பிற்குரிய ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் துஆவிற்கு விண்ணப்பித்தார். மேலும் நான் வக்ஃப் செய்து தற்போது அஹ்மது நகரில் ஜமாஅத் மருத்துவமனையில் பணியை தொடங்க உள்ளேன். எனக்கு வழிகாட்டவும் என்று அவர் வேண்டினார்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: கடின உழைப்புடன் பணி செய்யுங்கள். மேலும் துஆவும் செய்யுங்கள். முந்தைய மருத்துவருக்கு நான் கூறியிருந்தேன். அவருக்கும் இதே வழிகாட்டல் தான். அவரும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அல்லாஹ் தான் நோயாளிக்கு குணமளிக்கின்றான். எனவே எப்போதும் நோயாளியைப் பார்க்கும்போது துஆ செய்து விட்டு பாருங்கள். மருந்துச் சீட்டில் மருந்தை எழுதும்போது அதற்கு மேல் அவனே குணமளிக்கின்றான் என்று எழுதுங்கள். ஒரு முறை குத்பாவில் நான் இது பற்றி கூறியிருந்தேன். பின்னர் நோயாளியைப் பார்த்த பிறகு இரவில் தொழும்போது தொழுகையில் அந்த நோயாளிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அந்த நோயாளிகளுக்கு குணமளிப்பானாக. எனது கையில் குணத்தை வழங்குவானாக. மேலும் பரக்கத் செய்வானாக என்று துஆ செய்யுங்கள். மேலும் ஒவ்வொரு நோயாளியுடனும் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டால் நோயாளியின் பாதி நோய் மருத்துவரின் கூற்றாலேயே நீங்கி விடும். மேலும் பாதி நோய் பின்னர் மருந்துகளைக் கொடுத்து நீங்கி விடும். இவ்வாறு அல்லாஹ் உங்களின் கரத்தில் குணம் வழங்குவான். எராளமான நோயாளிகள் உங்களிடம் வருவார்கள். அல்லாஹ் உங்களுக்காக அவர்களுக்கு குணமளிப்பான் இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் இந்த சந்திப்பை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக.

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை 23 பிப்ரவரி 2021)

*(மல்ஃபூஸாத் தொடர்ச்சி...)*

கைவிடுகின்றவர்கள் மற்றும் துரோகம் செய்து குற்றங்களில் அடைக்கலம் பெறக்கூடிய அதாவது பொய்யை பாதுகாப்பானது என்று கருதக்கூடியவர்கள் மிகக் கடுமையான தவறிழைக்கின்றார்கள்.

### பொய்யை மேற்கொள்வதால் மனித உள்ளம் இருளாகி விடுகின்றது

தற்காலிகமாக வேண்டுமென்றால் சில நன்மை இருப்பதாக மனிதன் கருதலாம். ஆனால் உண்மையில் பொய்யை மேற்கொள்வதால் மனித உள்ளம் இருளாகி விடுகின்றது. உள்ளுக்குள்ளேயே மனிதனை கரையானைப் போன்று அது அரித்து விடுகின்றது. ஒரு பொய்யை மறைக்க பின்னர் மேலும் எராளமான பொய்களை அவனுக்கு உருவாக்க நேரிடுகின்றது. ஏனென்றால் அந்தப் பொய்யை அவனுக்கு உண்மை என்ற வடிவத்தை கொடுக்க வேண்டியதுள்ளது. எனவே இதேபோன்று உள்ளுக்குள்ளேயே அவனது ஒழுக்க மற்றும் ஆன்மீக ஆற்றல்கள் வீணாகி விடுகின்றன. பின்னர் இறைவன் மீதே இட்டுக்கட்டி பொய்யுரைப்பதற்கும், இறைவனின் தூதர்களையும், இமாம்களையும் பொய்ப்படுத்துவதற்கும் அவனுக்கு தைரியம் உருவாகி விடுகின்றது. மேலும் அத்தகைய நபர் இறைவனின் பார்வையில் أَظْلَم என்ற நிலையை அடைகின்றார். இது குறித்து இறைவனும் مَنْ أَظْلَمُ مِمَّنِ افْتَرَىٰ عَلَى اللَّهِ كَذِبًا أَوْ كَذَّبَ بِآيَاتِهِ என்று கூறியுள்ளான். அதாவது இறைவனின் மீது பொய்யுரைத்து இட்டுக்கட்டுபவனை விட அல்லது அவனது வசனங்களை பொய்ப்படுத்துபவனை விட அநீதியிழைப்பவர் யாராக இருக்க முடியும்? நிச்சயமாக நினைவிற் கெகாள்ளுங்கள். பொய் மிகவும் தீய காரியமாகும். அது மனிதனை அழித்து விடுகின்றது. இதை விட பொய்யின் அபாயகரமான விளைவு என்னவாக இருக்குமென்றால் மனிதன் இறைவனின் தூதர்களையும், அவனது வசனங்களையும் பொய்ப்படுத்தி தண்டனைக்குரியவனாக ஆகி விடுகின்றான். எனவே உண்மையை மேற்கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 333 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 04 Nov 2021 Issue No. 44

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**நோயாளிக்கு இறைவன் குணமளிக்கின்றான். எனவே நோயாளிகளை பார்க்கும்போது துஆ செய்து விட்டு பார்க்கவும். மருந்து எழுதும்போது மருந்துச் சீட்டின் மேல் அவனே (அல்லாஹ்வே) குணமளிப்பவன் என்று எழுதவும். பின்னர் நோயாளியைப் பார்த்த பிறகு இரவில் தொழுகைகளை தொழுங்கள். அப்போது தொழுகையில் யாரைப் பார்த்தீர்களோ அந்த நோயாளிகளுக்காக துஆ செய்யுங்கள்.அல்லாஹ் அவர்களுக்கு குணமளிப்பானாக என்று துஆ செய்யுங்கள்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அஹ்மதி மருத்துவர்களுக்கு வழங்கிய பொண்ணான அறிவுரைகள்**

## ஸய்யிதுனா ஹஸ்ர அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் பங்களாதேஷ் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த வாகிஃபீனே நவ் பிள்ளைகளின் காணொலி சந்திப்பு

அஹ்மதிய்யா ஜமாஅத் பங்களாதேஷைச் சேர்ந்த 136 வாகிஃபீனே நவ் பிள்ளைகளுக்கு 30 ஜனவரி 2021 சனிக்கிழமை மாலை 6:15 மணி முதல் 7:15 மணி வரை காணொலி மூலம் ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களை சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் பங்களாதேஷின் தலைமையக பள்ளிவாசலில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது.

அன்பிற்குரிய ஹுஸூர் (அய்ய) அவர்கள் அனைத்து வாகிஃபீனே நவ் பிள்ளைகளுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்ற பரிவும், நேசமும் நிறைந்த துஆவை வழங்கினார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. டாக்டர் அத்ஹர் அஹ்மது அவர்கள் சூரா ஆலி இம்ரான் அதிகாரத்தின் 36, 37 ஆகிய வசனங்களை ஓதினார்கள். மேலும் அதன் பெங்காளி மொழியாக்கத்தை எடுத்துரைத்தார்கள். அன்பிற்குரிய இர்ஃபான் ரஹ்மான் கவிதை படித்தார். அன்பிற்குரிய முனாதியுஷ் ஷஃபாஅத் ஹதீஸையும், அன்பிற்குரிய இஹ்ஸானுல் இர்ஃபான் பின் அப்துல் வஹ்ஹாப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மல்ஃபூஸாத் மேற்கோள்களையும் எடுத்துரைத்தார்கள். இந்த சந்திப்பின்போது ஏராளமான வாக்கிஃபீனே நவ் பிள்ளைகளுக்கு தனது அன்பிற்குரிய எஜமானரிடம் கேள்விகள் கேட்பதற்கும், அகப்பார்வைமிக்க பதில்களை அன்னாரிடமிருந்து பெறுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அன்பிற்குரிய சன்வார் அலி இர்ஃபான் என்ற ஒரு வாகிஃபீன் நவ் பிள்ளை நன்மை, தீமை என்ற இறை நியதி பற்றி கேள்வி கேட்டார். நாம் இதன் மீது எப்படி நம்பிக்கை கொள்வது என்று கேட்டார்.

ஹுஸூர் அவர்கள் இதற்கு இவ்வாறு பதிலளித்தார்கள்: தக்தீர் என்பது என்ன? நன்மை மற்றும் தீமை என்பதன் பொருள் என்ன? அதாவது நான் நல்ல செயல் செய்தால் இறைவன் அதற்கு நற்கூலி வழங்குவான் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட வேண்டும். மேலும் நான் தீமை செய்தால் அதற்கு எனக்கு தண்டனை கிடைக்கும் என்றும் நம்ப வேண்டும். இந்த விஷயத்தின் மீது நம்பிக்கை இருக்குமென்றால் மனிதன் நன்மைகளையே செய்வான். தீமைகளை செய்ய மாட்டான். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்வான். திருக்குர்ஆனில் எல்லையற்ற கட்டளைகள் வந்துள்ளன. அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் அதன் பொருள் இதுவே ஆகும். அதாவது நீங்கள் அதன்படி அமல் செய்தால் தீமைகளிலிருந்து விலகுவீர்கள். நன்மைகளை செய்வீர்கள். எனவே மறு உலகிற்கு செல்லும்போது அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியும். இது எப்படிப்பட்ட விஷயம் என்றால் அது நடக்கக்கூடியதாகும். மனிதன் தீமைகள் செய்தால் அவனுக்கு தண்டனை கிடைக்கும். நன்மைகள் செய்தால் அவனுக்கு நற்கூலி கிடைக்கும். இந்த விஷயத்தில் மனிதனுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நம்பிக்கை இருக்கும்போது பின்னர் மனிதன் நன்மை செய்கின்றான். தீமைகளிலிருந்து தப்பிக்கின்றான். திருக்குர்ஆனிலுள்ள கட்டளைகளின்படி அமல் செய்கின்றான். இதுவே அதன் பொருளாகும்.

மற்றொரு வக்ஃபே நவ் பிள்ளையான அன்பிற்குரிய நூருத்தீன் அஹ்மது சாஹிப் ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் இவ்வாறு கூறினார்: நாம் ஏன் திருக்குர்ஆன் ஓத வேண்டும்? இரண்டாவது, இறைவன் கொரோனா வைரஸை ஏன் அனுப்பியுள்ளான்?

ஹுஸூர் (அய்ய) அவர்கள் அதற்கு இவ்வாறு பதிலளித்தார்கள்: நீங்கள் எந்த வகுப்பில் படிக்கின்றீர்கள்?

நான் 3 வது வகுப்பில் படிக்கின்றேன் என்று அவர் கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள், நீங்கள் பள்ளிக்கூடத்தில் ஏன் படிக்கின்றீர்கள்? நீங்கள் படித்துக் கொண்டே செல்ல வேண்டும். நல்ல கல்வி பெற வேண்டும். பின்னர் ஏதாவது நாம் ஆக வேண்டும் என்பதற்காகதானே. அதேபோன்று நாம் தினமும் அதைப் படிப்பதற்கும், அதன்படி அமல் செய்வதற்கும், அதன் நன்மைகளை மேற்கொள்வதற்கும், அதில் கூறப்பட்டுள்ள தீமைகளிலிருந்து விலகுவதற்கும் அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனை ஒரு முழுமையான ஷரீஅத்தின் வடிவில் நமக்கு வழங்கியுள்ளான். ஏனென்றால் இது இறைவனின் வேதமாகும். அதனைப் படிப்பதற்கு அல்லாஹ் நற்கூலியும் வழங்குகின்றான். மனிதன் அல்லாஹ்விடத்தில் செல்லும்போது உங்களது கணக்கில் உங்களது அனைத்து நன்மைகளும் எழுதப்பட்டு விடுகின்றன.

கொரானா வைரஸ் ஏன் உருவாகியது? உலகில் பல நோய்கள் வருகின்றன. சில நேரம் டைஃபாய்ட் நோய் வருகின்றது. சில நேரம் Flu ஏற்படுகின்றது. சில நேரம் வேறு ஏதாவதொரு நோய் வந்து விடுகின்றது. எனவே சில முறை இதுபோன்ற நோய்கள் Pandamic ஆக ஆகி விடுகின்றன. பின்னர் அது உலகின் எல்லா இடங்களிலும் பரவி விடுகிறது. இறைவன் என்று ஒருவன் இருக்கின்றான் என்பதை மனிதனுக்கு நினைவுபடுத்துவதற்காகவே அல்லாஹ் இந்த நோயை அனுப்புகின்றான். மேலும் மனிதன் இறைவன் பக்கம் வருவதற்கும், தனது பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டுவதற்கும் மேலும் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்து நல்ல பணிகளை மனிதன் செய்வதற்காகவும் இந்த நோய் வருகின்றது. எனவே இறைவன் மனிதர்களுக்கு புரிய வைப்பதற்காகவும், நல்ல பணி செய்ய மனிதனுக்கு படிப்பினை வழங்குவற்கும் இந்த நோய் வருகின்றது. நல்ல பணி செய்யுங்கள். சில முறை சிறிய அளவில் தண்டனை கிடைக்கின்றது. அது உலகில் இந்த தண்டனை கிடைத்து விடுகின்றது. உங்களது ஆசிரியர்கள் உங்களுக்கு சில முறை தண்டனை வழங்குவதைப் போன்றாகும். நாம் நல்ல பணிகளை செய்வோமென்றால் கொரோனா வைரஸ் முடிந்து விடும். நாம் அல்லாஹ்வை திருப்திப்படுத்துவோம் என்றால் அவனிடம் மன்னிப்பு வேண்டினால் பின்னர் இன்ஷா அல்லாஹ் இது முடிந்து விடும். அல்லாஹ் பின்னர் நமக்கு உடல் ஆரோக்கியமான வாழ்க்கையை வழங்கி விடுவான். ஆனால் நாம் அல்லாஹ்வின் கூற்றை கேட்காவிட்டால் பின்னர் இந்த இயற்கையான நடைமுறை நடந்து கொண்டே செல்லும். எதுவரை அல்லாஹ் இந்த நோயை நீட்டிக்கின்றான் என்று பாருங்கள்.

ஒரு வக்ஃபே நவ் டாக்டர் மஹ்மூத் அஹ்மது சாஹிப் ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் இவ்வாறு வேண்டினார். அன்பிற்குரிய ஹுஸுர் (அய்ய) அவர்களே! லைபீரியாவில் சமீபத்தில் தான் மருத்துவராக எனது பணி நியமனம் நடந்துள்ளது. எனவே நான் தங்களிடம் துஆவிற்காக விண்ணப்பிக்கின்றேன். மேலும் தங்களிடம் அறிவுரைகளையும், வழிகாட்டல்களையும் வேண்டுகின்றேன்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: குறிப்பான வழிகாட்டல் என்னவென்றால், அங்கு சென்று தொண்டாற்ற வேண்டும் என்ற உணர்வுடன் ஆஃப்ரிக்க மக்களுக்கு தொண்டாற்றுங்கள். ஆஃப்ரிக்க சமுதாயம் எப்படிப்பட்டதென்றால் சரியான முறையில் அவர்களுக்கு தொண்டாற்றினால் அவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொண்டால் பின்னர் அவர்கள் உங்களுக்கு நன்றியுடையவர்களாக ஆகி விடுவார்கள். மேலும் இதன் மூலம் ஜமாஅத் நமக்கு தொண்டாற்றுகின்றது என்று அவர்கள் மகிழ்ச்சியடைந்து விடுவார்கள். நமது முன்னுதாரணத்தை சரியானதாக நாம்

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad